# சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்




**அறிக்கை இலக்கம் - பீஈஆர்/ஏ/2019/எஸ்எம்ஈ/10**

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்புரை | 1 |
| 2. | அறிமுகம் | 5 |
| 2.1 | பின்புலம் | 5 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரபலம் | 8 |
| 2.3 | கணக்காய்விற்கான தலைப்பினைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் | 8 |
| 2.4 | கணக்காய்வு நடைமுறை | 8 |
| 2.5 | கணக்காய்வுப் பிரவேசம் | 8 |
| 2.6 | முக்கிய கணக்காய்வு நோக்கம் | 9 |
| 3. | முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் | 10 |
| 3.1 | நிலுவைக் கட்டமைப்பு | 10 |
| 3.2 | வேலைத் திட்டத்திற்காக அரிசி ஆலை உரிமையாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டினைத் தீர்மானித்தல் | 11 |
| 3.3 | நிதி பெற்றுக் கொடுத்தல் | 15 |
| 3.4 | கடன் தொகையை மீளச் செலுத்தல் | 17 |
| 3.5 | கடன் நிவாரண வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் | 18 |
| 3.6 | தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படும் செயல்கள் | 36 |
| 3.7 | நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றல் | 48 |
| 4. | பரிந்துரைகள் | 56 |
| | பின்னிணைப்பு | 59 |

## 01. நிறைவேற்றுப் பொழிப்புரை

இலங்கை மக்களின் பிரதான உணவான சோற்றினை வழங்கும் நெற்பயிர்ச் செய்கையானது இலங்கையின் பிரதான விவசாயப் பயிராகும். எமது நாட்டின் வருடாந்த அரிசித் தேவையானது 2.4 மில்லியன் மெட்ரிக் டொன் என மதிப்பிடப்பட்டிருந்ததோடு அண்ணளவாக 3.6 மில்லியன் மெட்ரிக் டொன் நெல்லாகக் காணப்படுகின்றது. 2018/19 பெரும் போகத்திற்கு முன்னரான நான்கு போகங்களில் நிலவிய வரட்சி காரணமாக நெல் உற்பத்தி குறைந்தமை விவசாயிகளுக்குப் போன்றே நுகர்வோருக்கும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறே 2000 ஆம் ஆண்டளவில் இலங்கையில் காணப்பட்ட 2000 அரிசி ஆலை உரிமையாளர்களின் எண்ணிக்கை தற்போது 800 ஆக குறைந்துள்ளது. இதன் காரணமாக அரிசி உற்பத்தியானது வரையறுக்கப்பட்ட ஒரு சிலரின் கைகளில் காணப்படுவதுடன் அரிசி சந்தையில் ஏகாதிபத்திய நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலைமைகளுக்குத் தீர்வாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மிக விரைவாக கடன் நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டம் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைத்திட்டம் அநுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, குருணாகல், புத்தளம், கண்டி, அம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு போன்ற தெரிவு செய்யப்பட்ட 8 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அரசாங்கத்தினால் வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஒரு மில்லியன் ரூபா ஆகும். இந்த வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய தொடர்புடைய நிறுவனங்களாவன விவசாய அமைச்சு, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் பாராளுமன்ற அந்தஸ்தற்ற அமைச்சு, திறைசேரி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய 8 மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், உணவு ஆணையாளர் திணைக்களம் மற்றும் மாவட்ட நெல் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச்சாலை என்பனவாகும்.

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் மூலம் நெல் கொள்வனவின் போது நியாயமான விலையினை நிர்ணயித்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் அரிசி உற்பத்தியினைப் பாரிய அளவிலான வியாபாரிகள் பலரின் கையிலிருக்கும் நிலைமையினை மாற்றி நுகர்வோருக்கு நியாயமான விலையின் கீழ் அரிசியினைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தை உருவாக்குதல் போன்ற

பல்வேறு நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதனை மதிப்பிடலே இந்தக் கணக்காய்வின் நோக்கமாகும்.

அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் பெரும் போகத்தில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந்த வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அதற்குத் தேவையான நிதி கிடைக்கப் பெற்றிருத்தல், மத்திய அரசினால் மாவட்டச் செயலாளர்களுக்கு மற்றும் மாவட்டச் செயலாளர்களினால் மாவட்டக் சங்கங்களுக்கு குறிக்கப்பட்ட வகையில் நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கான நிதியினைப் பெற்றுக்கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளமை, வேலைத் திட்டத்திற்காக ஆலை உரிமையாளர்களைத் தெரிவு செய்வது போன்றே தொழிற்படு மூலதனத் தேவையினைத் தீர்மானிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டமை, மாவட்டக் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியம் அதன் அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிப்பதில் சிக்கல்கள் காணப்பட்டமை. நெல் கொள்வனவு செய்கையில் உர பெயர்ப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை, ஒரு சில ஆலை உரிமையாளர்களினால் எதிர்பார்க்கப்பட்ட அரிசி அளவினைக் சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை, கையளிப்பதில் கால தாமதம் காணப்பட்டமை மற்றும் அரிசி விற்பனை செய்யும் முறைமை தொடர்பில் வேலைத்திட்டத்தின் ஆரம்பத்தில் கவனம் செலுத்தப்பட்டிருக்காமை கணக்காய்வில் முக்கியமாக அவதானிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே, ஆலை உரிமையாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட அரிசிக்காக சங்கத்தின்ால் குறித்த வகையில் வரைவு வாடகை செலுத்தப்பட்டிருக்காமை, அங்கத்துவ அரிசி ஆலை உரிமையாளர்களினால் வங்கிக்கு அதுவரையிலும் அவர்களினால் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன் தவணைகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அல்லது கடன் தவணை செலுத்துதலை மிகக் குறைந்த மட்டத்தில் பேணுதல் போன்ற காரணிகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் வேலைத் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல்களின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கடமையானது உணவு ஆணையாளரின் ஊடாக தயாரிக்கப்பட்ட கணிணி வேலைத் திட்டத்திற்குத் தேவையான தரவுகளை வழங்குவது எனினும், இந்த சங்கத்தினால் சரியான முறையில் செயற்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த வேலைத் திட்டத்தினால் இது வரையிலும் மாவட்டக் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதி கூடிய தொகையான ரூபா 206 மில்லியன் வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்

பிரதிநிதித்துவப்படுத்தும் பொலனறுவை மாவட்ட கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்ருந்ததுடன் பொலனறுவை மாவட்ட சங்கத்தின் தலைவரால் அவரது தனிப்பட்ட தற்றுணிவின் அடிப்படையில் ஒவ்வொரு ஆலை உரிமையாளருக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு அந்தக் கடன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அந்தந்த மாவட்ட சங்கங்களுக்கு அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதி சங்கத்தினால் குறிப்பிட்ட காலத்தினுள் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை, வேலைத்திட்ட ஒழுங்குறுத்தலுக்குத் தேவையான தரவு ஒழுங்கமைப்பிற்குத் தேவையான தரவுகள் அங்கத்துவ ஆலை உரிமையாளர்களினால் சரியான முறையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை போன்ற சிக்கல்களினூடாக வெளிப்படுத்தப்பட்து. அரச கொள்கையாக அரச நிதியினைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்திற்குப் பங்களிப்பு செய்யப்பட வேண்டிய ஒவ்வொரு அரச நிறுவனங்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதைப் புறக்கணித்தல் அல்லது போதுமான அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருக்காமை என்பதாகும். அதன் காரணமாக குறித்த வேலைத் திட்டம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகையை எட்டுவதற்கு முடியாது போனமையால் அதன் பிரதிபலன் அந்தத் துறையினுள் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைப் போன்றே நுகர்வோரையும் எட்டுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கத்துவச் சங்கத்தினால் நெல் கொள்வனவு செய்தல், அரிசி விற்பனை, தொழிற்படு மூலதனத் தொகை அங்கத்தவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றம் செய்தல், வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் மாவட்டக் சங்கத்திற்கு மேற்கொள்ளப்படும் மத்தியஸ்தம் கூட்டுறவு உதவி ஆணையாளரின் முழுமையான மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறே தாமதமின்றி நெல் கொள்வனவு செய்வதற்கு உரிய நிதியை நேர காலத்துடன் சங்கத்திற்கு வழங்குதல், நெல் விற்பனை சபை களஞ்சிய கொள்வனவினை உச்சபட்ச பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றைச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கடன் தொகையாக இந்த நிதியினை அங்கத்தவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, உற்பத்தி செய்யப்படும் அரிசியின் அளவின் அடிப்படையில் மட்டும் குறித்த நிதி அளவினை ஒப்பந்தத்தின் பிரகாரம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். மற்றும் மாவட்டக் சங்கங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் கடன் தொகை ஒப்பந்த கால

இறுதியில் மீண்டும் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாத ஆலை உரிமையாளர்களுக்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தலும் செய்யப்படல் வேண்டும். அவ்வாறே உரிய மாவட்ட சங்கங்களினால் அரசினால் தீர்மானிக்கப்படும் உட்சபட்ச சில்லறை விலையின் கீழ் அந்தந்த மாவட்ட மட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக / சதொச பிரதேச விற்பனை நிலையங்கள் ஊடாக அரிசி விற்பனை செய்யப்படல் வேண்டும் என்பதும் சந்தையில் அரிசி விலை தொடர்பில் தொடர்ச்சியான தொடர் நடவடிக்கைச் செயற்பாடு மற்றும் அதற்கு நேரொத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

இலங்கையின் வருடாந்த அரிசித் தேவைப்பாட்டின் 0.5 அளவு மட்டுமே இந்த வேலைத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் அதற்கு இணையாக அரசாங்கத்தினால் அரிசிக்காக உட்சபட்ச சில்லறை விலையினை நிர்ணயித்து அரிசி விலையினை குறைத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடியான மத்தியஸ்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் போகத்தின் போது சந்தையில் அரிசி விலை முன்னர் காணப்பட்ட விலையினை விடக் குறைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறிருக்க நீடித்திருக்கக் கூடிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உற்பத்தியாளர்களை உயர்த்துவதுடன், அரிசி சந்தையினைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அனைத்துத் தரப்பினருக்கும் பிரதிபலன் பெற்றுக் கொள்ளக் கூடிய இவ்வாறான வேலைத் திட்டத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு செல்வதற்கு தேவையான நடவடிக்கை வழங்கப்படல் வேண்டும்.

## 2. அறிமுகம்

### 2.1 பின்புலம்

கடந்த 4 போகங்களில் நிலவிய வரட்சி நிலைமை இலங்கையில் விவசாயத் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமை, அந்தப் போகங்களில் நெல் உற்பத்தி பாரிய அளவில் குறைவடைவதற்குக் காரணமாக இருந்தது. இதன் பெறுபேறாக அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட குறைவானது விவசாயிகளைப் போன்றே நுகர்வோருக்கும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் சந்தையில் அரிசி மொத்த விலை நாடு 1 கிலோ கிராம் ரூபா. 94.00 ஆகவும் 1 கிலோ கிராம் சம்பா ரூபா. 112.00 வரையிலும் அதிகரித்துச் சென்றிருந்தது. சந்தையில் அரிசி உற்பத்தியாளர்கள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் உருவாகி இருத்தல் இவ்வாறு அரிசி விலை தொடர்பில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.


2019 பெப்ரவரி 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த PS/HC-4/CP/41/2019 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வகையில் 2000 ஆம் ஆண்டளவில் இருந்த 2000 அரிசி ஆலை உரிமையாளர்களின் எண்ணிக்கை அவர்களினால் ஆலைகளை நடாத்திச் செல்லுகையில் முகங்கொடுத்த பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தற்போது எண்ணிக்கை 800 பேர் அளவிலாக வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன் தவணைகளை மீளச் செலுத்த முடியாமை மற்றும் போதுமான அளவிலான தொழிற்படு மூலதனம் இல்லாமை என்பன அந்த ஆலை உரிமையாளர்கள் முகங்கொடுத்துள்ள முக்கியமான நிதிக் குறைபாடுகளாகும். அவர்களின் இந்த செயலிழந்த தன்மையானது சந்தையில் அரிசி உற்பத்தி வரையறுக்கப்பட்ட சிலரின் உரிமையாவதற்கு காரணமாகி உள்ளது போன்றே அது அரிசி விலை பாதகமான வகையில் அதிகரித்துச் செல்லுவதற்குக் காரணமாகி உள்ளது.

அதற்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை கட்டியெழுப்புவதன் மூலம் அரிசிச் சந்தையினுள் போட்டித் தன்மையினை ஏற்படுத்துவதும் அதன் மூலம் அரிசியின் சில்லறை விலையினை நிலையாக்குவதும் நெல் விவசாயிகளுக்கு நியாயமான விலையினைப் பெற்றுக் கொடுத்தலும் நடைமுறைத் தேவையென கண்டறியப்பட்டிருந்தது. இதன் பெறுபேறாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நெல் விவசாயிகளுக்காக நியாயமான விலையை

நிறுவுவதற்கும் நுகர்வோருக்கு நியாயமான சில்லறை விலையை உருவாக்குவதையும் எதிர்பார்த்து கௌரவ ஜனாதிபதியினால் 2019 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்குக் கிடைக்கப் பெற்ற அனுமதியின் பிரகாரம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மிக விரைவில் கடன் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காகவே பெயரிடப்பட்ட இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இங்கு பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சினால் திறைசேரி, விவசாயத் திணைக்களம், நெல் விற்பனை சபை, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், அரச மற்றும் தனியார் வங்கி போன்று சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுடன் கலந்துரையாடி நீடு நிலைக்கக்கூடிய முறைமையொன்று பிரேரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல்கள் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தொடர்ச்சியாகும்.

அதற்கமைய பொலன்னறுவை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு, கண்டி, குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களை நோக்காகக் கொண்டு இந்தக் கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் பிரேரணை முறை செயற்படுத்தப்படும். இந்த 08 மாவட்டங்களில் உள்ள சிறிய மற்றும் 228 நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இந்தக் கடன் நிவாரண பிரேரணைத் திட்டத்தின் கீழ் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளுவோர் ஆவர். இந்த ஆலை உரிமையாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் சங்கத்தின் ஊடாக கடன் நிவாரணப் பிரேரணைத் திட்டத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரத்தின் மூலம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் உடன்பட்ட நிபந்தனைகளின் கீழ் தனியான மற்றும் கூட்டுப் பொறுப்புகளுக்குக் கட்டுப்படும் வகையில் மூன்றாம் தரப்பினராகக் கடன் நிவாரண பிரேரணைத் திட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தில் முதலாம் தரப்பு அந்தந்த மாவட்டத்திற்கான மாவட்டச் செயலாளராக இருப்பதுடன் இரண்டாம் தரப்பு வலயப் பொறுப்பு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆவர்.



சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம்
தொழிற்படு மூலதன தேவைப்பாடு
நிதிக்கான விண்ணப்பம் மற்றும் பெற்றுக் கொடுத்தல்
மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
மாவட்டச் செயலாளர்
விவசாய அமைச்சில்
பொதுத் திறைசேரி
சட்ட ரீதியான ஒப்பந்தம்
ஒப்பந்தம் 01
ஒப்பந்தம் 02
பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சினால் சட்ட ரீதியான ஒப்பந்தம் தயாரித்தல்
வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் கழகம் மற்றும் அதன் அங்கத்தவர்களுக்கிடையே
அரிசி உற்பத்தி தொடர்பான பிரேரணைகள் தயாரித்தல் மற்றும் மாவட்டச் செயலாளரின் அனுமதி
ஆலை உரிமையாளர்களுக்கு காப்புறுதிக்கான தொகைக்கான காப்புறுதிக்கு உட்படல்
மாவட்டச் செயலாளர்
மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் கழகம்
வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் வங்கிக் கணக்கொன்றைப் பேணுதல்
நிதித் தேவைப்பாட்டினை மாகாண கூட்டுறவு ஆணையாளரின் பரிந்துரையுடன் மாவட்டச் செயலாளருக்கு அனுப்புதல்
கழகத்தின் கணக்கிற்கு பணம் வரவு வைத்தல்
நெல் கொள்வனவு செய்து அரிசியாக மாற்றுதல் மற்றும் விற்பனை செய்தல்
ஆலை உரிமையாளர்களினால் நெல் கொள்வனவு செய்தல்
உர மானிய வேலைத்திட்டத்தின் விவசாயிகள் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்த விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்தல்
அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்திற்கு அமைவாதல்
குறைந்தபட்சம் அரசினால் உறுதிப்படுத்தப்பட்ட நெல் விலையினைக் கவனத்திற் கொள்ளல்
அரைத்தல் கட்டணம் சலுத்துதல்
ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரைத்தல் கட்டணத்தின் ஒரு பகுதியினை ஆலை உரிமையாளர்களின் மாதாந்த வங்கிக் கடன் தவணைக்கு செலுத்துதல் மற்றும் மீதியை ஆலை உரிமையாளர்களுக்கு செலுத்துதல்
நிதியினை மீளச் செலுத்துதல்
மீளச் செலுத்தல்
மாவட்டச் செயலாளரினால் விடுவிக்கப்படும் நிதியினை 06 மாதம் பூர்த்தியடைந்தவுடன் கூட்டுறவுக் கழகத்தினால் மாவட்டச் செயலாளர்களுக்கு மீளச் செலுத்தல்.
அரிசி விற்பனை
ஆலை உரிமையாளர்களினால் அரிசி உற்பத்தி செய்யப்பட்ட உடனேயே வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் கையேற்கப்படுதல் மற்றும் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்
மீளச் செலுத்தாமை
மாவட்டச் செயலாளரினால் ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல்.
கண்காணிப்பு மற்றும் நெறிப்படுத்தல்
பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சின் தலைமைத்துவத்தை வகிக்கும் விவசாய அமைச்சு, திறைசேரி, கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கை அமைச்சின் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு
பொருளாதார மறுசீரமைப்பு பொது வழங்கல் அமைச்சு
கடன் நிவாரணம் வழங்குவதற்குரிய முறைமைகளைத் தயாரித்தல்
விவசாய அமைச்சு
கடன் நிவாரணம் வழங்குவதற்குரிய வழிகாட்டல் தயாரித்தல்
விவசாய அமைச்சு
பொதுத் திறைசேரியில் கடன் மீளச் செலுத்துவதற்கு இரண்டாம் தரப்பினருடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
மாவட்டக் கூட்டறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
அரிசி உற்பத்தியாளர்களின் பாரிய சங்கம்
கூட்டுறவு ஆணையாளரின் அறிவுரையின் பேரில் கழகத்தினால் மேற்கொள்ளப்படும் அரிசி கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் கண்காணித்தல்
உணவு ஆணையாளர்
முன்னேற்றத்தைக் கண்காணிக்கத் தேவையான தரவுகளை பெற்றுக் கொள்ள தரவு ஒழுங்கமைப்பை
கழகங்களுக்குரிய தரவுகளை வழங்குதல்

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரபலம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் 2018 இன் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 3(1)ஈ, 5(2), 12(ஏ) பிரிவுகளின்படி எனது தலைமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான தலைப்பினைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள்

இலங்கையில் அரிசி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து சென்று அரிசி உற்பத்தி ஒருசிலரது கைகளில் தங்குதல், நெல் உற்பத்தியாளர்களுக்குப் போன்றே அரிசி நுகர்வோருக்கும் பாதகமான வகையில் தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தமை கணக்காய்விற்காக இந்தத் தலைப்பினை தெரிவு செய்வதற்குக் காரணமாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு நடைமுறை

இந்தச் செயலாற்றல் கணக்காய்வை மேற்கொள்ளுகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

- (அ) உரிய அமைச்சரவைப் பத்திரம் மற்றும் தீர்மானங்களின் பரிசீலனை
- (ஆ) உரிய ஒப்பந்தப் பரிசீலனை
- (இ) வாழ்கைச் செலவுக் குழுவின் தீர்மானம் உள்ளிட்ட ஏனைய உரிய அரச நிறுவனங்களின் கொள்கைகள், தீர்மானம் மற்றும் தகவல் பயன்பாடு
- (ஈ) அரிசி உற்பத்தியாளர்களின் சங்கத்திற்குச் சென்று அங்கத்தவர்களைச் சந்தித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

## 2.5 கணக்காய்வுப் பிரவேசம்

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் எண்ணிக்கை வருடாந்தம் குறைவடைந்து செல்வதால் அரிசி சந்தையில் நெல் கொள்வனவாளர் சிலரினால் ஏகாதிபத்திய நிலைமை உருவாக்கப்பட்டிருந்தமை அரசாங்கத்திற்குச் சிக்கலாகக் காணப்பட்டது. அந்தச் சிக்கலைக் குறைத்துக் கொள்வதற்காக மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக பிரதேசத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அதன் மூலம் அரிசி சந்தையில் ஏகாதிபத்திய நிலைமை மட்டத்தினைக் குறைத்துக் கொள்ளுவதும், விவசாயிகளுக்கு நெல்லுக்காக நியாயமான விலை கிடைத்தல் மற்றும் நுகர்வோருக்கு சகாய விலைக்கு

அரிசியினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் மூலம் அரிசி சந்தையில் உகந்த தன்மையினை ஏற்படுத்துவதற்காக செயற்படுத்தப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் பக்கத் தரப்பினராக பல்வேறு அரச நிறுவனங்கள், சங்க நிறுவனங்களின் கடமைப் பொறுப்புக்களை உறுதியாக அறிந்து கொள்ள முடிந்துள்ளது. அதற்கமைய அந்தக் கடமைப் பொறுப்புக்கள் வேலைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை எட்டுவதற்காகத் தேவையான வகையில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதனை மதிப்பிடும் நோக்கில் இந்தத் தலைப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வினை மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

## 2.6 முக்கிய கணக்காய்வு நோக்கம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எட்டப்பட்டுள்ளனவா என்பதனை மதிப்பிடல்.

**கணக்காய்வு மூலப்பிரமாணங்கள்**

i. வேலைத்திட்டம் ஆரம்பித்ததன் பின்னர் ஆலை உரிமையாளர்களினால் தொடர்ச்சியான உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டிருத்தல்.

ii. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் உற்பத்திக் கொள்வனவு மற்றும் களஞ்சிய வசதிகள்.

iii. இலக்கம் 19/0549/101/030 கொண்டதும் மற்றும் 2019.02.11 ஆம் திகதியிடப்பட்டதுமான அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அதற்குரிய 2019.02.12 ஆம் திகதி கொண்ட அமைச்சரவை அனுமதி

iv. மாவட்டச் செயலாளர், வலயப் பொறுப்பு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம்

v. மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம்

vi. வாழ்கைச் செலவுக் சுங்க் கூட்டத்தின் தீர்மானங்கள்

vii. விவசாயக் கிராமியப் பொருளாதார நடவடிக்கை, கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்பாசன மற்றும் மீன்பிடி மற்றும் நீர் வள அபிவிருத்தி அமைச்சின் இலக்கம் 4/3/11-4 கொண்டதும் 2019.03.20 ஆம் திகதி இடப்பட்டதுமான வழிகாட்டல்

viii. அரச நிதிப் பிரமாணம்

ix. அரிசி தொடர்பான கட்டுப்பாட்டு விலை

## 3. முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 நிலுவைக் கட்டமைப்பு

(அ) இந்தக் கடன் நிவாரண போசணைத் திட்டத்துடன் தொடர்புபட்ட முக்கிய தரப்பினர் மற்றும் அவற்றின் கடமைப் பொறுப்புகள் பின்வருமாறு அமையும்

| | தரப்பினர் | கடமைப் பொறுப்புக்கள் சுருக்கமாக |
|---|---|---|
| (i) | விவசாய அமைச்சு (செயலாளர்) | முழுமையான வழிநடத்துதல் |
| (ii) | வேலைத் திட்டத்துடன் தொடர்புடைய 08 மாவட்டங்களுக்குரிய மாவட்டச் செயலாளர்கள் | பொதுத் திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்படும் நிதி மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கத்திடம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அந்த நிதியினை 06 மாதங்கள் நிறைவடைந்ததும் சங்கத்தின் மூலம் அறவிடப்பட்டு மீண்டும் திறைசேரிக்கு மீளச் செலுத்துதல். |
| (iii) | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ( மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்) | மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்காணித்தல். |
| (iv) | உணவு ஆணையாளர் | கனணி மயப்படுத்தப்பட்ட தரவு ஒழுங்கமைப்பை பேணிச் செல்லல் மற்றும் முழுமையான கண்காணித்தல் |
| (v) | மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | i. அரசினால் வழங்கப்பட்ட நிதியை அவ்வாறு வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 06 மாதம் பூர்த்தி ஆனதுடன் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஊடாக மீளவும் திறைசேரிக்கு செலுத்துதல். |

ii. அங்கத்துவ ஆலை உரிமையாளர்கள் மூலம் அரிசி உற்பத்தி செய்தல்.

iii. சங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ள முறையில் அரசின் குறைந்த உறுதியான விலையின் கீழ் விற்பனை செய்தல், அங்கத்தவர்களுக்கு வரைவு வாடகை செலுத்தல்.

**(ஆ) உரிய நிறுவனத்தினால் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்**

மேற்கூறிய நிறுவனங்களினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்படும் கடமைப் பொறுப்புக்கள் குறித்த சட்ட ரீதியான ஒப்பந்தம் மற்றும் வழிகாட்டல்களுக்கு இசைவாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பிடுகையில் அதன் தரப்பினரால் குறித்த கடமைப் பொறுப்புக்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அறிக்கையில் பின்னர் கலந்துரையாடப்படும்.

**3.2 வேலைத் திட்டத்திற்காக அரிசி ஆலை உரிமையாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டினைத் தீர்மானித்தல்**

மேற்கூறிய வேலைத் திட்டத்திற்கு உரியதான வழிகாட்டல்களுக்கு அமைய அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் தொழிற்படு மூலதன அளவானது அந்த ஆலை உரிமையாளரின் கடன் தொகை, அரிசி ஆலைகளின் கொள்வனவு மற்றும் வசதிகளைக் கருத்திற் கொண்டு மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அல்லது வலயப் பொறுப்பு உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும். அந்தத் தீர்மானங்களுக்கு ஏற்ப சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கையில் 5 மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களின் அரிசி உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் 228 அங்கத்தவர்களுக்குத் தேவையான தொழிற்படு மூலதனம் ரூபா.1,215 மில்லியன் என மதிப்பிடப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 8 சங்கங்களுக்கு ரூபா. 1,215 மில்லியன் விண்ணப்பித்திருந்த போதிலும் அரசாங்கத்தினால் இந்த வேலைத் திட்டத்திற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது ரூபா. 1,000 மில்லியனுக்கு மட்டுமே ஆகும். விபரங்கள் பின்வருமாறு.

| மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் | அங்கத்தவர் எண்ணிக்கை | விண்ணப்பிக்கப்பட்ட தொகை | அரசினால் ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| வரையறுக்கப்பட்ட குருணாகல் மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 16 | 90 | 65 |
| வரையறுக்கப்பட்ட புத்தளம் மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 39 | 120 | 80 |
| வரையறுக்கப்பட்ட அநுராதபுரம் மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 26 | 200 | 140 |
| வரையறுக்கப்பட்ட பொலனறுவை மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 58 | 400 | 425 |
| வரையறுக்கப்பட்ட அம்பாறை மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 13 | 25 | 20 |
| வரையறுக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 14 | 150 | 100 |
| வரையறுக்கப்பட்ட கண்டி மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 13 | 30 | 20 |
| வரையறுக்கப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 49 | 200 | 150 |
| | 228 | 1,215 | 1,000 |

இது தெடர்பான பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பொலனறுவை மாவட்டம்**

விவசாயத் திணைக்கள செயலாளரினால் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் வழங்கப்படுவதற்கு உரியதான முறைமைகள் தொடர்பான வழிகாட்டல்களின் பிரகாரம் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களின் கடன் சுமை, உற்பத்திக் கொள்வனவு மற்றும் கடனை மீளச் செலுத்தக்கூடிய ஆற்றல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு முழுமையான கடன் தொகையினைத் தீர்மானித்து அரசாங்கத்தினால் மாவட்டச் செயலாளர்களின் ஊடாக கடன் தொகையினை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வேலைத் திட்டங்களில் மாவட்ட

சங்கங்களுக்கு வழங்கப்பட கூடிய தொகையினை ரூபா.206 மில்லியன் பொலனறுவை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் பொலனறுவை மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரினால் அவரது தனிப்பட்ட தற்றுணிவின் அடிப்படையில் ஒவ்வொரு ஆலை உரிமையாளர்களுக்கும் நெல் கொள்வனவு செய்வதற்குக் கடன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்தப் பொலனறுவை மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நாடு முழுவதிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களைப் பிரதிநிதிப்படுத்தும் சங்கத்தின் தலைவரும் ஆவார்.

**(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டம்**

அம்பாந்தோட்டை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு 2019 ஆம் ஆண்டு ஏப்பிரல் 05 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா.38 மில்லியனில் 48 சதநீதமான அளவு அந்தச் சங்கத்தின் மொத்த அங்கத்தவர் 15 பேரில் 03 அங்கத்தவர்களிடையே நெல் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்தது. இந்த அங்கத்தவர்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளை வகிப்பவர்கள் என்பதுடன் ஏனைய அங்கத்தவர்கள் கடன் நிவாரணம் கிடைக்காமைக்கு தகமைகளைப் பூர்த்தி செய்யாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) கண்டி மாவட்டம்**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கடன் தொகையினை விண்ணப்பிப்பதற்கு செயற்றிட்ட அறிக்கையொன்று தயாரித்தல் வேண்டும். அது வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தயரிக்கப்படல் வேண்டும் என 2019 ஜனவரி 12 ஆம் திகதி சங்கத்தின் ஊடாக வரையறுக்கப்பட்ட கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கடித்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன.

i. இந்தச் செயற்றிட்ட அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய ரூபா.30,000 தொகையினை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் செயற்றிட்ட அறிக்கைக்கேற்ப சங்கத்திற்குத் தேவையான தொழிற்படு மூலதனம் ரூபா. 30

மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையில் நிதியைப் பகிர்ந்தளித்தல் தொடர்பிலான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விவசாயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதற்கான முறைமைகள் தொடர்பான வழிகாட்டல் இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டிருக்காத நிபந்தனையாக நிதிக்காக எதிர்பார்க்கப்படும் வட்டி வீதம் 12 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ii. 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் திகதியாகிய கணக்காய்வு தினம் வரையிலும் அங்கத்தவர்களின் கடன் மீதி தொடர்பான தகவல்களின் திட்பநுட்பத் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு குறித்த தகவல்களை உரிய வங்கியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. அரிசி ஆலை உரிமையாளர்களினால் வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள கடன் தொகையினைக் கவனத்திற் கொண்டு, அங்கத்தவர்களின் அரிசி ஆலைகளைப் பரீட்சித்து, அந்த அரிசி ஆலைகளின் கொள்ளளவையும் கருத்திற் கொண்டு அந்த ஆலை உரிமையாளர்களுக்கு பொருத்தமான தொழிற்படு மூலதனத்தினை தீர்மானித்தல் வேண்டும் எனினும் வரையறுக்கப்பட்ட கண்டி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அங்கத்தவர்களின் அரிசி ஆலைகளைப் பரீட்சித்து அந்த அங்கத்தவர்களின் அரிசி ஆலை கொள்ளளவை மட்டும் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது என்பதும், அந்த அரிசி ஆலை உரிமையாளர்களினால் வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

iv. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதற்கு உரிய முறைமைகள் தொடர்பான வழிகாட்டலின் பிரகாரம் தேவையான தொழிற்படு மூலதனத் தொகையைத் தீர்மானிக்கையில் கடன் தொகை மற்றும் கொள்ளளவு கவனத்திற்

கொள்ளப்பட்டிருக்குமாயின் தொழிற்படு மூலதனம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய சதவீதம் மற்றும் கண்டி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள சதவீதத்தினைக் கவனத்திற் கொள்கையில் அங்கத்தவர்கள் மூவர் இடையே 5.36 சதவீதம் தொடக்கம் 19.52 சதவீதம் வரையான தெளிவாக புலப்படும் மாறுபாடு காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3.3 நிதி பெற்றுக் கொடுத்தல்

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கத்திற்கு குறிக்கப்பட்ட நிதியைப் பெற்றுக் கொடுக்கையில் விவசாய அமைச்சினால் பொதுத் திறைசேரியில் உரிய நிதியை விண்ணப்பிப்பதுடன், பொதுத் திறைசேரியினால் அவ்வாறு கிடைக்கும் நிதியினை மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் ஊடாக உரிய சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

அதற்கமைய அந்த வேலைத் திட்டதின் கீழ் அரசாங்கத்தினால் பல கட்டங்களின் கீழ் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கங்களுக்கு கடன் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை மாவட்ட செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த நிதியானது மாவட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்ட திகதி தெடக்கம் 06 மாத காலம் நிறைவடைந்தவுடன் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஊடாக பொதுத் திறைசேரிக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) இந்த வேலைத்திட்டத்திற்கு ரூபா.1000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் கணக்காய்வுக் காலப் பகுதியினுள் (2019 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி வரையில்) பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா. 434.87 மில்லியன் ஆகும்.

| மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் | பெற்றுக் கொடுத்த தொகை (ரூபா.மில்லியன்) |
|---|---|
| வரையறுக்கப்பட்ட குருணாகல் மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 16 |
| வரையறுக்கப்பட்ட புத்தளம் மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 64 |
| வரையறுக்கப்பட்ட அநுராதபுரம் மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 59.87 |
| வரையறுக்கப்பட்ட பொலனறுவை மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 206 |
| வரையறுக்கப்பட்ட அம்பாறை மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 16 |
| வரையறுக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 25 |
| வரையறுக்கப்பட்ட கண்டி மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 10 |
| வரையறுக்கப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்ட உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 38 |

இந்தத் தொகையில் ரூபா.147.87 மில்லியன் நிதியானது மாவட்டச் செயலாளர்களுக்கு கிடைத்த திகதி மற்றும் மாவட்டச் செயலாளர்களினால் மாவட்டச் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கையில் 05 மாவட்டச் சங்கங்களில் 21 நாட்கள் தொடக்கம் 87 நாட்கள் வரையிலான கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய கால தாமதம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அந்தத் தாமதத்தின் தாக்கம் செலுத்திய காரணங்களாக வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி 2019 பெப்ரவரி 12 ஆம் திகதியளவில் கிடைத்திருந்த போதிலும் வழிகாட்டல்கள் ஒரு சில மாவட்டச் செயலாளர்களுக்கு கிடைப்பதற்குத் தாமதமாகியமை மற்றும் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் இருந்த தாமதம் போன்று ஒரு சில மாவட்டச் சங்கங்களில் குறித்த வகையில் ஆவணங்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்காமை போன்ற காரணிகள் செல்வாக்கு செலுத்தியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மிக விரைவில் கடன் நிவாரணம் வழங்கி அவர்களைக் கட்டியெழுப்புவதாக இருப்பினும் இவ்வாறு மாவட்டச் செயலாளர்களிடம் நிதி தங்கியிருக்கும் காரணத்தால் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு உரிய காலத்தில் நெல் கொள்வனவு செய்கையில் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு காணப்படாது இருந்தமை ஒரு சில சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவதானிக்கப்பட்டது.

| **மாவட்டம்** | **மாவட்ட செயலாளர்களுக்கு 2019.11.01 ஆம் திகதியில் நிதி விடுவித்தல்** | | **மாவட்ட சங்கங்களுக்கு நிதி கிடைத்தல்** | | **நிதி பெற்றுக் கொடுப்பதில் தாமதமான நாட்கள்** |
|---|---|---|---|---|---|
| | திகதி | தொகை ரூபா. மில்லியன் | திகதி | தொகை ரூபா. மில்லியன் | |
| மட்டக்களப்பு | 2019.03.18 | 25 | 2019.05.22 | 25 | 64 |
| குருணாகல் | 2019.03.11 | 16 | 2019.04.10 | 16 | 29 |
| அம்பாறை | 2019.03.11<br>2019.07.09 | 5<br>11 | 2019.04.11<br>2019.08.15<br>2019.09.25 | 05<br>5.50<br>5.50 | 30<br>37 |
| அநுராதபுரம் | 2019.03.11<br>201.07.03 | 35<br>24.87 | 2019.04.17<br>2019.09.30 | 35<br>24.87 | 37<br>87 |
| பொலனறுவை | 2019.04.04 | 25<br>06 | 2019.04.25 | 31 | 21 |

## 3.4 கடன் தொகையை மீளச் செலுத்தல்

மேலே 3.3(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாவட்டச் சங்கங்களுக்கு விடுவிக்கப்படும் நிதியானது உரிய திகதி தொடக்கம் 06 மாதங்கள் நிறைவடைந்ததும் மாவட்டச் செயலாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு உரிய மாவட்டச் சங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டி இருப்பினும், அந்தச் சங்கங்களுள் பொலனறுவை சங்கத்திற்கு விடுவிக்கப்பட்ட ரூபா. 206 மில்லியன் தொகையில் ரூபா. 67 மில்லியன் தொகையும் அம்பாந்தோட்டை சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதியான ரூபா. 38 மில்லியனில் ரூபா. 27.38 மில்லியன் தொகையும் கண்டி சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா. 10 மில்லியன் தொகையில் ரூபா. 5 மில்லியன் தொகையும் என ரூபா. 434.87 மில்லியனில் ரூபா. 99.38 மில்லியன் அதாவது 22.85 சதவீதம் குறித்த மாவட்டச் சங்கங்கள் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 06 மாதங்கள் பூர்த்தியாகும் திகதியில் அதன் தாமதக்

காலம் குறைந்தது 05 நாட்கள் தொடக்கம் ஆகக் கூடியது 35 நாட்கள் ஆகும். அதற்கமைய குறித்த சங்கங்களினால் ஒப்பந்தம் மீறப்படும் வகையில் நிதி தேவையற்ற வகையில் கையிருப்பில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கடன் தொகை மீளச் செலுத்துகையில் சங்கத்தினால் ஒப்பந்தத்தை மீறும் வகையில் செயற்படுமிடத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஒப்பந்தத்தின் 5(i), 5(ii), 5(iii) பந்திகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய மீள் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தொகையில் கூடிய சதவீதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ள அம்பாந்தோட்டை மற்றும் பொலனறுவை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கங்களுக்கு எதிராக அம்பாந்தோட்டை மற்றும் பொலனறுவை மாவட்டச் செயலாளர்கள் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை 2020 யூலை 20ஆந் திகதி எடுக்கப்பட்டிருந்தது.

**3.5 கடன் நிவாரண வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

**3.5.1 நெல் கொள்வனவு**

**3.5.1.1 நெல் கொள்வனவு செய்வதற்குக் கடன் நிதியினைப் பயன்படுத்துதல்**

இந்த வேலைத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா. 1000 மில்லியனாக இருந்ததுடன் வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையான ரூபா. 434.87 மில்லியனை சக்கரமாகப் பயன்படுத்தி மாவட்டச் சங்கங்களினால் நாடு வகை நெல் 01 கிலோ கிராமிற்கு ரூபா. 38 மற்றும் சம்பா வகை நெல் 01 கிலோ கிராமிற்கு ரூபா. 41 எனும் நிலையான விலையின் கீழ் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நெல்லின் பெறுமதி ரூபா. 691.57 மிலலியனாக இருந்ததுடன் நெல்லின் அளவு 16,000 மெட்ரிக் டொன் (16 மில்லியன் கிலோ கிராம்) ஆகும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| மாவட்டம் | பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி ரூபா. | பெற்றுக் கொள்ளப்பட்ட நெல்லின் பெறுமதி ரூபா. | நெல்லின் அளவு கிலோகிராம் |
|---|---:|---:|---:|
| பொலனறுவை | 206,000,000 | 387,140,964 | 8,788,591 |
| அநுராதபுரம் | 59,870,000 | 38,801,388 | 952,273 |
| கண்டி | 10,000,00 | 19,383,374 | 471,110 |
| புத்தளம் | 64,000,000 | 113,412,975 | 2,615,955 |
| குருணாகல் | 16,000,000 | 28,554,134 | 685,223 |
| அம்பாறை | 16,000,000 | 20,488,719 | 499,946 |
| அம்பாந்தோட்டை | 38,000,000 | 52,063,655 | 1,327,624 |
| மட்டக்களப்பு | 25,000,000 | 31,728,487 | 758,396 |
| மொத்தம் | 434,870,000 | 691,573,696 | 16,099,118 |

**ஆதாரம் - உணவு ஆணையாளர் திணைக்களம்**

### 3.5.1.2 உர பெயர்ப்பட்டியலில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படல் வேண்டும்.

அந்த வழிகாட்டல் நூலில் இலக்கம் 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு அங்கத்துவ ஆலை உரிமையாளருடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் நிதி பிரகாரம் அரசாங்கத்தின் மூலம் செயற்படுத்தப்படும் நிவாரண உர வேலைத் திட்டத்தின் விவசாயிகள் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஆயினும் இதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாத 1,187 சந்தர்ப்பங்கள் 08 மாவட்டங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

| சங்கம் | உர நிவாரண வேலைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பொலனறுவை | 602 |
| புத்தளம் | 350 |
| கண்டி | 44 |
| அநுராதபுரம் | 48 |
| அம்பாறை | 17 |
| அம்பாந்தோட்டை | 63 |
| மட்டக்களப்பு | 20 |
| குருணாகல் | 43 |
| | 1,187 |

### 3.5.1.3 நெல் கொள்வனவு தொடர்பாக சங்க மட்டத்தில் கண்டறியப்பட்ட அவதானிப்புகள்

**(அ)** கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்

சனத்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் புள்ளி விபரங்களுக்கு ஏற்ப கண்டி மாவட்டத்தின் 2018/2019 பெரும் போகத்தில் ஹெக்டயருக்கு சாதாரணமாக நெல் அறுவடை 4,289 கிலோகிராம் நெல்லாக இருந்த போதிலும் கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களால் 04 விசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பயிரிடப்படும் விதைக்கும் பரப்பு மற்றும் விளைச்சலை ஒப்பிடுகையில் 108,551

கிலோகிராம் அசாதாரணமான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நிலைமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ)** பொலனறுவை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்

பொலனறுவை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் கணக்காய்விற்குப் பெற்றுக் கொடுத்திருந்த தகவல்களின் அடிப்படையில் 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் 62 ஆலை உரிமையாளர்களுக்காக கடன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும், அதில் 53 பேர் மட்டுமே நெல்லைக் கொள்வனவு செய்திருந்தனர். அதற்கமைய கடன் பெற்றுக் கொண்ட ஆலை உரிமையாளர்கள் 09 பேரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 388 மில்லியன் பெறுமதியான நெல்லில் ரூபா. 292.6 மில்லியன் பெறுமதியான நெல் ஆலை உரிமையாளர்கள் 19 பேருக்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இது மொத்த நெல் கொள்வனவுப் பெறுமதியில் 75 சதவீதத்தை விஞ்சியதாகும். மிகுதி ஆலை உரிமையாளர்கள் 34 பேரிடையே, ரூபா. 96 மில்லியன் பெறுமதியான நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த நெல் கொள்வனவு தொடர்பாக ஒவ்வொரு அங்கத்தவர்களையும் தெரிவு செய்திருந்த அடிப்படை சிக்கல் நிறைந்ததாகக் காணப்பட்டதுடன் அது தொடர்பில் மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்தினால் செய்யப்பட்ட விசாரணையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.5.2 அரிசி உற்பத்தி

#### 3.5.2.1 நெல் கொள்வனவு செய்தல் மற்றும் உற்பத்தி செய்ய எதிர்பார்க்ககும் அரிசியின் அளவு

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விரைவில் கடன் நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் நிதியினைப் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினால் அரிசி உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடல் வேண்டும். அவ்வாறே அவர்களினால் உற்பத்தி செய்யப்படும் அரிசி தமது சங்கங்களிடம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறே மாவட்டச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சங்கத்தினால் அங்கத்துவ அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நெல்

தொகையினை வழங்கிய திகதி தொடக்கம் மூன்று (03) நாட்களுக்குள் பச்சையரிசியையும் ஐந்து (05) நாட்களுக்குள் அவித்த அரிசியும் ஒப்படைக்ககப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டள்ளது. இதற்குரிய அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

உணவு ஆணையாளரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளின்படி 2019 நவம்பர் 27 ஆம் திகதியில் இந்த வேலைத் திட்டத்தின் கிழ் கிடைத்த நிதியினைப் பயன்படுத்தி அந்தந்த சங்கங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த நெல் (சம்பா, நாடு, பச்சையரிசி) அளவானது 16,099,118 கிலா கிரமாக உள்ளதுடன், அந்த நெல்லின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அரிசியின் அளவானது 10,558,420 கிலோ கிராம் ஆகும். விபரங்கள் பின்வருமாறு.

| மாவட்டச் சங்கம் | நெல்லின் அளவு கிலோ கிராம் | உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவு |
|---|---|---|
| பொலனறுவை | 8,788,591 | 6,668,330 |
| அம்பாறை | 499,946 | 370,580 |
| குருணாகல் | 685,223 | 192,265 |
| அம்பாந்தோட்டை | 1,327,624 | 767,625 |
| மட்டக்களப்பு | 758,396 | 440,920 |
| அநுராதபுரம் | 952,273 | 297,435 |
| புத்தளம் | 2,615,955 | 1,559,700 |
| கண்டி | 471,110 | 261,565 |
| மொத்தம் | 16,099,118 | 10,558,420 |

(ஆ) இலங்கை அரிசி ஆலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் பெறப்பட்ட தகவலின்படி குறித்த கடன் யோசனை முறையின் கீழ் 8 மாவட்டச் சங்கத்தின் ஊடாக அங்கத்துவ ஆலை உரிமையாளர்களுக்கு 17,217,999 கிலோகிராம் அளவிலான நெல் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த நெல்லுடன் ஒப்பிடுகையில் அரிசி 10,761,247 கிலோகிராம் அளவு குறித்த 8 சங்கங்களுக்கு கிடைத்திருக்க வேண்டியிருப்பினும், அங்கத்துவ ஆலை உரிமையாளர்களினால் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது 9,206,825 கிலோகிராம் அளவிலான அரிசி மட்டுமே ஆகும். அதற்கமைய அரிசிச் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கையில் 1,554,425 கிலோகிராம் குறைபாடொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| மாவட்டக் கூட்டுறவுச் சங்கம் | நேல் கொள்வனவு செய்யும் அளவு கி.கி (கி.கி) | பெறப்பட வேண்டிய அரிசியின் அளவு (கி.கி) | பெறப்பட்ட அரிசியின் அளவு (கி.கி) | வேறுபாடு (ருபா.) | பெறப்பட்ட அரிசியின் அளவானது பெறப்பட வேண்டிய அரிசியின் அளவின் சதவீதமாக % |
|---|---|---|---|---|---|
| பொலனறுவை | 9,341,091 | 5838,181 | 5,749,520 | 88,661 | 98 |
| புத்தளம் | 2,751,215 | 1,719,509 | 1,560,755 | 158,755 | 90 |
| அநுராதபுரம் | 1,143,551 | 714,719 | 365,925 | 348,794 | 51 |
| மட்டக்களப்பு | 1,009,186 | 630,741 | 530,455 | 100,286.00 | 84 |
| கண்டி | 370,630 | 231,644 | 220,560 | 11,084.00 | 95 |
| அம்பாறை | 566,585 | 354,115 | 311,425 | 42,691.00 | 87 |
| அம்பாந்தோட்டை | 1,362,368 | 851,480 | 233,750 | 617,730 | 27 |
| குருணாகல் | 673,373 | 420,858 | 234,435 | 186,423 | 55 |
| **மொத்தம்** | **17,217,999** | **10,761,247** | **9,206,825** | **1,554,424** | |

இதற்கமைய அந்தந்த மாவட்டக் சங்கங்களின் அங்கத்துவ ஆலை உரிமையாளர்களினால் எதிர்பார்க்கப்பட்ட வகையில் அனைத்துக் சங்கங்களும் அரிசி பெற்றுக் கொடுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்படுவதுடன் அம்பாந்தோட்டை, குருணாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் தொடர்பில் செய்யப்பட்டது தீங்கானதாகும்.

மேலே 3.6.2.1 பந்தியில் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உணவு ஆணையாளரினால் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் அதற்கு உரியதாகப் பெறப்பட வேண்டிய அரிசியின் அளவு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகள் மற்றும் அதே காரணிகளுக்கு உரியதாக அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த (ஆ) பந்தியில் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கு இடையே பாரியளவிலான வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(இ) அரிசி உற்பத்தி தொடர்பில் சங்கங்களின் மட்டத்திலான அவதானிப்புகள்**

ஒவ்வொரு மாவட்டச் சங்கத்தினால் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் அரிசி உற்பத்தி செய்தல் தொடர்பில் இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

**(I) குருணாகல் மாவட்ட அரிசி உற்பத்திக் கூட்டுறவுக் சங்கம்**

குருணாகல் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கத்திற்குரிய அங்கத்துவ ஆலை உரிமையாளர்களினால் தங்களால் உற்பத்தி செய்யப்படும் அரிசி சங்கத்திற்கு உரிய திகதியில் ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும் அவ்வாறு அரிசியை ஒப்படைப்பதற்காக எடுக்கப்பட்ட கால தாமதம் 21 நாட்கள் தொடக்கம் 76 நாட்கள் வரையான கால வீச்சினுள் பரந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர், மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், அரிசி ஆலை உரிமையாளர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மாவட்டக் சங்கத்தின்ால் மேற்கொள்ளப்படும் அரிசி கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் நடவடிக்கையின் மேற்பார்வை, மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் செய்யப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது. ஆயினும் மேற்பார்வைக் குறைபாடு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(II) அம்பாறை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் சங்கம்**

மாவட்டக் சங்கத்தினால் ஆலை உரிமையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் நெல்லை அரிசியாக மாற்றி மீண்டும் சங்கத்திடம் ஒப்படைக்கையில் ஒரு கிலோகிராம் நெல்லில் எதிர்பார்க்கப்படும் அரிசியின் அளவை மீண்டும் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டி இருப்பினும், அம்பாறை மாவட்டத்தில் ஒரு சில ஆலை உரிமையாளர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டி இருந்த அரிசியின் அளவு 62 சதவீதமாக இருந்த போதிலும், ஒரு சில அரிசி ஆலை உரிமையாளர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அரிசியின் அளவு 34.6 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.3 உற்பத்தி செய்யப்பட்ட அரிசியினை விற்பனை செய்தல்

#### 3.5.3.1 ஆகக் கூடிய உறுதிப்படுத்தப்பட்ட விலை தொடர்பான நிபந்தனையை நிறைவேற்றுதல்

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொழிற்படு மூலதனத்தைப் பயன்படுத்தி அங்கத்துவ ஆலை உரிமையாளர்களினால் நெல்லை அரிசியாக மாற்றி தமது மாவட்ட சங்கத்திற்கு பெற்றுக் கொடுப்பதுடன் மாவட்டக் சங்கத்தினால் அரிசியின் அதி கூடிய சில்லறை

விலையின் கீழ் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. 2019 நவம்பர் 27 ஆம் திகதியில் அந்தந்தக் சங்கத்தின்ால் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவு தொடர்பாக உணவு ஆணையாளரினால் மற்றும் இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தரவுகளில் வேறுபாடு காணப்படுவதுடன், விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு தொடர்பில் பெறப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் அளவு மற்றும் பெறுமதி தெடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஆகும்.

| **மாவட்டக் சங்கம்** | **தொகை (கிலோகிராம்)** | **பெறுமதி (ரூபா.)** |
|---|---:|---:|
| பொலனறுவை | 6,741,211 | 535,283,330 |
| அம்பாறை | 548,790 | 39,200,317 |
| குருணாகல் | 106,095 | 7,908,689 |
| அம்பாந்தோட்டை | 237,450 | 15,393,040 |
| மட்டக்களப்பு | 415,670 | 32,145,702 |
| அநுராதபுரம் | 298,455 | 22,166,979 |
| புத்தளம் | 3,898,770 | 300,740,507 |
| கண்டி | 228,399 | 16,563,623 |
| | 12,478,840 | 969,402,187 |

அரிசியின் விற்பனை தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 08 மாவட்டங்களின் மொத்த அரிசி விற்பனை 12,474,840 கிலோகிராம் ஆகும். வேலைத் திட்டத்தின் பிரகாரம் அரசின் அதி கூடிய சில்லறை விலையின் கீழ் அரிசி விற்பனை செய்யப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் அந்த அரிசி விற்பனை செய்தலுக்குப் பயன்படுத்தும் முறைமைகள் தொடர்பில் வேலைத் திட்ட ஆரம்பத்தில் ஒப்பந்தங்கள் ஏற்படுத்துகையில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரின் கவனத்திற்கு உட்பட்டிருக்காமை ஒப்பந்தத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சதொச மற்றும் பல்பொருள் அங்காடி ஊடாக விற்பனை செய்தல்**

(i) 2019 நவம்பர் 27 ஆம் திகதி வரைக்கும் கூட்டுறவுச் சங்கங்களினால் செய்யப்பட்ட அரிசித் தொகையான 12,474,840 கிலோ கிராம் அளவில் 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் விற்பனை செய்யப்பட்ட 3,771,598 கிலோ கிராம் தொகையானது சதொச உள்ளிட்ட பல்பொருள் அங்காடி மற்றும் அரச வழங்குனருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், மிகுதி அரிசித் தெகையானது குறித்த சங்கங்களினால் பல்வேறு விற்பனை முறைகள் ஊடாக அரிசி சந்தைக்கு வியாபாரச் சின்னத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட போதும் அந்தத் தகவல்கள் சங்கங்களினால் கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்ளப்பட முடியாதிருந்தது. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| **நிறுவனம்** | **2019.10.31 ஆம் திகதியில் விற்பனை செய்த தொகை கிலோகிராம்** | **பெறுமதி ரூபா.** |
|---|---|---|
| சதொச நிறுவனம் | 2,485,240 | 197,939,270 |
| பல்பொருள் அங்காடி | 794,380 | 64,003,974 |
| பல்பொருள் அங்காடி | 74,960 | 5,996,800 |
| பல்பொருள் அங்காடி | 104,393 | 8,201,180 |
| பல்பொருள் அங்காடி | 14,250 | 1,099,025 |
| பல்பொருள் அங்காடி | 35,500 | 2,866,500 |
| அரச வழங்குனரான (தனியார்) நிறுவனம் | 262,875 | 20,884,150 |
| | 3,771,598 | 300,990,899 |

(ii) மேற்கூறிய தகவல்களின்படி சதொச நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த அரிசி தொகையானது சதொச நிறுவனத்தின் மொத்த அரிசி தேவைப்பாட்டின் 21 சதவீதம் ஆகும். இதற்கமைய நுகர்வோருக்கு அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு அரிசி கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் இங்கு உதித்துள்ளது.

(iii) 2019 ஒக்டோபர் 31 ஆம திகதி வரையில் வழங்குனரான தனியார் நிறுவனத்திற்கு ரூபா. 20,884,150 பெறுமதியான அரிசி 262,875 கிலோகிராம் அளவில் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் அரசின் வழங்குனராக இருப்பதனாலும் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட அரிசி தொகை திறந்த சந்தைக்கு வழங்கப்படாததாலும் வேலைத் திட்டதின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அரிசிச் சந்தையினுள் போட்டித் தன்மையை உருவாக்குதல் மற்றும் அரிசி விலையை நிலைப்படுத்தல் போன்ற நோக்கங்களை எட்டியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.3.2 அரிசி விற்பனை தொடர்பில் கண்டி மற்றும் பொலனறுவை மாவட்டச் சங்கங்களுக்குரிய அவதானிப்புகள்

விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்**

வரையறுக்கப்பட்ட கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவ ஆலை உரிமையாளர்கள் பெற்றுக் கொடுக்கும் அரிசியின் பெறுமதிக்கு காசோலையைப் பெற்றுக் கொண்டு அரிசி விற்பனை செய்யும் முறையொன்று பின்பற்றபப்ட்டு வந்திருந்தது. இது தெடர்பில் பின்வரும் காரணிகள் மேலதிகமாக அவதானிக்கப்பட்டன.

(I) 2019 நவம்பர் 05 ஆம் திகதியில் ரூபா. 2,537,375 பெறுமதியான 19 காசோலைகள் கைவசம் இருந்ததுடன் அதில் ரூபா. 1,080,960 பெறுமதியான 10 காசோலைகள் முற்திகதியிடப்பட்ட காசோலைகளாக காணப்பட்டதுடன் முதிர்வுத் தினம் 03 நாட்கள் தொடக்கம் 120 நாட்கள் வரையில் பூர்த்தியான ரூபா. 1,456,415 பெறுமதியான 09 காசோலைகளும் இவற்றில் அடங்கும்.

(II) குறித்த கால எல்லைக்குள் அங்கத்தவர்கள் 13 பேருக்காக ரூபா. 12,555,473 பெறுமதியான அரிசித் தொகை சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்டிருந்தது. 2019 நவம்பர் 05 ஆம் திகதியில் 04 அங்கத்தவர்களினால் வழங்கப்பட்டிருந்த 04 காசோலைகள் மறுக்கப்பட்டிருந்தது. அதன் பெறுமதி ரூபா. 412,610 என்பது அவதானிக்கப்பட்டிருந்தது.

(III) கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு அரிசி விற்பனை செய்து கொள்ளுவதற்கான முறைமையொன்று இல்லாததால் சங்கத்தின் ஊடாக விற்பனை செய்வதற்குப் பதிலாக அங்கத்தவர் அவர்களால் கடன் அடிப்படையில் அரிசி விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய நுகர்வோருக்கு கட்டுப்பாட்டு விலையின் அனுகூலம் கிடைத்துள்ளதா என்பது அவதானிக்கப்படவில்லை. இங்கு கூட்டுறவுச் சங்கத்தின் கடன் தொகை அறவிடப்படுவதில் எற்பட்ட தாமதம் காரணமாக அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியை தொழிற்படு மூலதனமாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு மீண்டும் மீண்டும் ஈடுபடுத்த முடியாதிருந்தது. 2019 ஏப்பிரல் தொடக்கம் செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்த நெல்லின் அளவு 356,724 கிலோகிராமாக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா.

14,710,976 ஆகும். சுற்றறிக்கையின் பிரகாரம் 03 நாட்களுக்குள் அரிசியைக் கையளிக்காது அங்கத்தவரே அரிசியை தம்மிடமே வைத்திருந்து விற்பனை செய்தல் மற்றும் அரிசிக்கு 20 நாட்களுக்கு மேற்பட்ட முற்திகதியிடப்பட்ட காசோலைகள் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முதிர்வடைந்த காசோலைகள் 120 நாட்கள் வரையிலும் வைப்பிலிடாமையால் அரசாங்கம் பெற்றுக் கொடுத்த தொழிற்படு மூலதனம் ரூபா. 10 மில்லியன் வினைத்திறனுடனும் மற்றும் உற்பத்தித் திறனுடனும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பெருங் கூட்டுறவில் தலைமைத்துவத்தை பிரதிநிதிப்படுத்தும் பொலனறுவை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்.**

அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா. 206 மில்லியன் நிதியை பயன்படுத்தி விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து சங்கத்தின் அங்கத்துவத்தை வகிக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்கள் ஊடாக அரிசியை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டுள்ள முறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் அவதானிக்கப்பட்டன.

i. கடன் விடுப்புச் செய்தல் அறிவுரை சுற்றறிக்கையின்படி மற்றும் ஒப்பந்தத்தின்படி அரிசி விற்பனை செய்து பெறப்படும் பணம் வேறொரு கணக்கில் வைப்பிலிடப்பட்டு கொடுக்கல் வாங்கல் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அதற்கமைய தனியார் வங்கியொன்றில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கில் இந்தப் பணம் வைப்பிலிடப்பட்டிருந்தது. வடமத்திய மாகாண கூட்டுறவு சாசனத்திற்கு ஏற்ப அரச வங்கியொன்றில் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டுமாயினும், தனியார் வங்கியொன்றில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ii. தனியார் வங்கியொன்றில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 100450004581 இலக்கம் கொண்ட கணக்கில் 2019 ஏப்பிரல் 01 ஆம் திகதி தொடக்கம் 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி வரையிலும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு 70 காசோலைகள் மூலம் ரூபா. 170,055,000 தொகை அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய கொடுப்பனவு வவுச்சர் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், காசோலை விநியோகத்திற்குரிய எவ்வித ஆவணங்களையும் சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்ததுடன் அந்த அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் தலைவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதும், கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இங்கு உள்ளக நிர்வாக முறையின் ஆற்றலின்மை காரணமாக இவ்வாறான கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. இந்தக் காசோலைகளுக்கு உரிய விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| காலப்பகுதி | காசோலைகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா.) |
|---|---|---|
| 04/04/2019 – 30/04/2019 | 4 | 1,745,000 |
| 02/05/2019 – 31/05/2019 | 11 | 25,025,000 |
| 01/06/2019 – 28/06/2019 | 16 | 18,720,000 |
| 01/07/2019 – 31/07/2019 | 11 | 32,750,000 |
| 01/08/2019 – 31/08/2019 | 6 | 36,400,000 |
| 01/09/2019 – 30/09/2019 | 10 | 29,100,000 |
| 01/10/2019 – 31/10/2019 | 125 | 26,315,000 |
| மொத்தம் | 183 | 170,055,000 |

மேலும் இது தொடர்பில் பௌதிகப் பரீட்சித்தல் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா. 100,000 பெறுமதியான இலக்கம் 516630 கொண்ட காசோலை முகாமையாளர், சனச அபிவிருத்தி வங்கியின் பெயரில் எழுதப்பட்டிருந்ததுடன், அதற்காக எவ்விதமான ஆவணமோ அல்லது கொடுப்பனவு வவுச்சரோ காணப்படவில்லை.

iii. கூட்டுறவுச் சங்கத்தின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் கணிணி மயப்படுத்தப்பட்ட Quick Book மென்பொருளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதன் அனைத்து நடவடிக்கைகளும் தலைவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

iv. வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் மக்கள் வங்கியில் மற்றும் தனியார் வங்கியொன்றில் இரண்டு நடைமுறைக் கணக்குகளிலும் சனச அபிவிருத்தி வங்கியில் சேமிப்புக் கணக்கிலுமாக மூன்று கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்காக காசு ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

v. 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் மூன்று வங்கிக் கணக்குகளிலும் பின்வருமாறு ரூபா. 239,267 மீதி மட்டுமே காணப்பட்டது.

| | |
|---|---|
| மக்கள் வங்கிக் கணக்கு | (ரூபா. 605,048) |
| தனியார் வங்கியின் நடைமுறைக் கணக்கு | ரூபா. 385,566 |
| சனச அபிவிருத்தி வங்கி | ரூபா. 458,749 |

vi. 2019 திசெம்பர் 06 ஆம் திகதியில் கூட்டுறவுச் சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்டிருந்த அரிசியில் ரூபா. 112 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன், கடனுக்கு விற்பனை செய்கையில் உரிய வாடிக்கையாளருடன் எழுத்து மூல ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கோ அல்லது கடன் தொகைக்கு நியாயமான வகையில் பிணை வைப்பினை வைத்திருக்காது இந்த கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

vii. வரையறுக்கப்பட்ட பொலனறுவை மாவட்ட கூட்டுறவுச் சங்கம் 4 தனியார் நிறுவனங்களுடன் மேற்கொண்ட கடன் விற்பனையானது வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த வாடிக்கையாளர்களின் கடன்படு மீதியில் சமனற்ற தன்மை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. பொலனறுவை மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் கடன்பட்டோர் ஏட்டிற்கு அமைய 2019 திசெம்பர் 06 ஆம் திகதியில் குறித்த 4 நிறுவனங்களினால் சங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா. 57,245,677.00 ஆக இருந்ததுடன், அந்தத் திகதியில் இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் கடன்பட்டோர் ஏட்டின் படி அந்த வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா. 3,851,065.00 ஆகும். அதற்கமைய ரூபா. 53,394,612.00 மீதி சமப்படுத்தப்படாததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| | **வாடிக்கையாளர்** | **வரையறுக்கப்பட்ட பொலனறுவை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் கடன்பட்டோர் பதிவேட்டின் பிரகாரம் மீதி.** ரூபா | **வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் கடன்பட்டோர் கடன்பட்டோர் பதிவேட்டின் பிரகாரம் மீதி** ரூபா | **வேறுபாடு** ரூபா |
|---|---|---|---|---|
| i. | பல்பொருள் அங்காடி | 8,295,420 | 984,165 | 7,311,255 |
| ii. | பல்பொருள் அங்காடி | 5,996,400 | 400 | 5,996,000 |
| iii. | பல்பொருள் அங்காடி | 3,200,000 | 2,866,500 | 333,500 |
| iv. | பல்பொருள் அங்காடி | 39,753,857 | - | 39,753,857 |
| | **மொத்தம்** | **57,245,677** | **3,851,065** | **53,394,612** |

viii. வங்கிக் கூற்றின் பிரகாரம் ரூபா. 18,077,488 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டிருந்ததுடன் 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையில் 05 மாதம் காலாவதியான ரூபா. 60,000 பெறுமதியான மறுக்கப்பட்ட 01 காசோலையும் 01 மாதம் தொடக்கம் 05 மாதம் வரையான காலத்திற்கான ரூபா. 18,077,488 பெறுமதியான 45 காசோலைகளும் இவற்றில் அடங்கும். இந்த காசோலைகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கத் தவறியதுடன், கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளரால் அந்தக் காசோலைகள் தலைவரின் பொறுப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ix. அனைத்து காசோலைக் கொடுக்கல் வாங்கல்களும் தலைவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், வெற்றுக் காசோலைகள் பொருளாளரிடம் கையெழுத்து பெறப்பட்டு தலைவரின் விருப்பிற்கமையவே மேற்கொள்ளப்பட்டிருந்தது. பரீட்சிப்பு செய்யப்பட்ட திகதியில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு 09 காசோலைகள் கையெழுத்திடப்பட்டிருந்தன.

- தனியார் வங்கியில் இலக்கம் 100450004581 கொண்ட நடைமுறைக் கணக்கில் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகிய இருவரும் கையெழுத்திட்ட வெற்றுக் காசோலைகள் 04 காணப்பட்டன.
- அரச வங்கியில் இலக்கம் 005-/-001-4-0091283 கொண்ட நடைமுறைக் கணக்கில் பொருளாளர் மற்றும் தலைவர் இருவரும் கையெழுத்திட்டிருந்த 01 காசோலையும் மற்றும் பொருளாளர் மட்டும் கையெழுத்திட்டடிருந்த 05 காசோலைகளும் இருந்தன. இவ்வாறு வெற்றுக் காசோலைகளில் கையெழுத்திடல் நிதி நிர்வாகம் தொடர்பில் உள்ளக நிர்வாகத்தின் ஆற்றலின்மையாக அவதானிக்கப்பட்டது.

x. கொடுப்பனவு கொடுக்கல் வாங்கல்களை கணிணியில் உள்ளீடு செய்தல், கொடுப்பனவு செய்தல், வங்கி கணக்கிணக்கக்கூற்று கணிணியில் பெற்றுக் கொள்ளல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் தலைவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்கீடு தொடர்பான உள்ளக நிர்வாகம் மிகவும் ஆற்றலற்று இருந்ததன் அடிப்படையில் ஒழுங்கீனம் ஏற்படுவதற்கான அவகாசம் காணப்படுகின்றது.

### 3.5.3.3 சந்தையில் அரிசியின் அதிகூடிய சில்லறை விலை

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மிக விரைவில் கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்தில் ஒரு முக்கியமான நோக்கமானது அரிசி சந்தையில் விலை உறுதித் தன்மையினை ஏற்படுத்தி அதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குவதாகும். இந்த நிலைமையை உருவாக்குவதற்கு அரசாங்கத்தினால் 2019 மே மாதம் 31 ஆம் திகதி மற்றும் இலக்கம் 2125/66 கொண்ட வர்த்தமானி மூலம் 2019 மே 31 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படும் வகையில் கீழே காட்டப்பட்டுள்ள வகையில் அரிசிக்கான அதி கூடிய சில்லறை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

| **ஆரிசியின் வகை** | **ஒரு கிலோ கிராமிற்கான அதி கூடிய சில்லறை விலை (ரூபா.)** |
|---|---|
| வெள்ளை சம்பா – ஆவியில் அவித்த / அவிக்கப்பட்ட உள்நாட்டு (கீரி சம்பா மற்றும் சீரக சம்பா) | 85 |
| வெள்ளை நாடு - அவிக்கப்பட்ட/அவியலில் அவித்த – உள்நாட்டு (மொட்டைக் கருப்பன் மற்றும் ஆட்டக்காரி தவிர) | 80 |
| சிவப்பு நாடு - அவிக்கப்பட்ட/அவியலில் அவித்த – உள்நாட்டு (மொட்டைக் கருப்பன் மற்றும் ஆட்டக்காரி தவிர) | 74 |

(ஆ) அதற்கமைய எந்தவொரு நபரும் விநியோகத்தர் அல்லது வியாபாரியினால் மேலே குறிப்பிடப்பட்ட அரிசி வகைக்கு குறிக்கப்பட்டுள்ள அதி கூடிய சில்லறை விலையை விடக் கூடிய விலைக்கு விற்பனை செய்தல், விற்பனை செய்வதற்காக சமர்ப்பித்தல், விற்பனைக்கு காட்சிப்படுத்தல் கூடாது. அவ்வாறெனினும் சதொச நிறுவனம் மற்றும் பல்பொருள் அங்காடி ஊடாக செய்யப்படும் விற்பனை தவிர்ந்தவிடத்து திறந்த சந்தையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை விட கூடுதலாகக் குறித்த அரிசி வகை விற்பனை செய்யப்படுவது பின்வரும் காரணிகளின் மூலம் அவதானிக்கப்பட்டன.

**i.** 2019.05.31 ஆம் திகதி தொடக்கம் 2019.11.30 ஆம் திகதி வரையிலான கால வீச்சினுள் 2003 இன் 09 ஆம் இலக்க நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான அதிகாரச்சபை சட்டத்தின் 20(5) பிரிவின் கீழ் 21 மாவட்டங்களில் அதி கூடிய விலை எல்லையை மீறி அரிசி விற்பனை செய்த 457 அரிசி விற்பனை நிலையங்களைச் சுற்றி வளைத்து ரூபா. 1,882,500 தண்டப் பணம் அறவிடப்பட்டிருந்தது.

**ii.** அந்த 21 மாவட்டங்களில் 5 மாவட்டங்களில் குறைந்தளவு சுற்றிவளைப்பு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் விபரங்களுக்கேற்ப 2019 ஜூன் தொடக்கம் 2019 நவம்பர் வரையில் அந்தப் பிரதேசங்களின் சந்தையில் அரிசி விலை மேற்கூறிய வர்த்தமானியின் கட்டுப்பாட்டு விலையை மீறி கூடிய விலை ரூபா. 1.19 தொடக்கம் ரூபா. 19.25 வரையான வீச்சில் சந்தையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் | மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை | அரிசி வகை | ஜூன் | ஜூலை | ஒகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கூடிய விலை (ரூபா.) | கூடிய விலை (ரூபா.) | கூடிய விலை (ரூபா.) | கூடிய விலை (ரூபா.) | கூடிய விலை (ரூபா.) | கூடிய விலை (ரூபா.) |
| பொலனறுவை | 01 | சம்பா | 12.31 | 10.50 | | 11.35 | 13.45 | 14.65 |
| | | நாடு | 9.81 | 9.70 | | 14.40 | 12.70 | 19.25 |
| களுத்துறை | 03 | சம்பா | | 2.33 | 3.00 | 6.47 | 10.25 | 11.00 |
| | | நாடு | | 4.00 | | | 10.00 | 10.00 |
| அநுராதபுரம் | 04 | சம்பா | 4.91 | 1.65 | 1.19 | 2.60 | 9.67 | 11.00 |
| | | நாடு | 4.96 | 5.07 | 5.17 | 7.25 | 11.58 | 16.00 |
| குருணாகல் | 05 | சம்பா | 3.88 | 2.85 | 5.00 | | 8.33 | 9.63 |
| | | நாடு | 4.60 | 3.00 | 5.00 | | 11.00 | 14.17 |
| கண்டி | 07 | சம்பா | 6.70 | 2.60 | 2.95 | 4.96 | | 12.60 |
| | | நாடு | 4.50 | 3.88 | 7.75 | 9.84 | | 17.00 |

அதற்கமைய நாட்டில் அரசாங்கத்தால் அரிசிக்காக தீர்மானிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதும் நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான அதிகாரசபையினால் போதுமானளவு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமை மற்றும் அரிசி சந்தைக்கு அரசாங்கத்தினால் இடம்பெறும் தலையீடு போதுமானதாக இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

### 3.5.3.4 அரைத்தல் கட்டணத்தை செலுத்துதல்

விவசாய, கிராமியப் பொருளாதார நடவடிக்கை, கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்பாசன மற்றும் மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சினால் 2019.03.20 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 4/3/11-4 கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதற்குரிய முறைமைகள் தொடர்பானவழிகாட்டல் (3) iv இன் பிரகாரம் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நெல்லை அரிசியாக மாற்றுவதற்கு வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆலை உரிமையாளர்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் அரைத்தல் கட்டணத்தின் ஒரு பகுதியினை ஆலை உரிமையாளர்களினால் வங்கி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடனுக்குப் பதிலாக செலுத்த வேண்டிய மாதாந்த வங்கி தவணையை உரிய வங்கிக்கு செலுத்த வேண்டியதுடன் மிகுதிப் பகுதியை ஆலை உரிமையாளர் செலுத்த வேண்டும். கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஆலை உரிமையாளரினால் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கடன் தொடர்பில் இந்த அரைத்தல் கட்டணம் பயன்படுத்தப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

| சங்கத்தின் பெயர் | வேலைத்திட்டத்திற்குப் பெற்றுக் கொடுத்த அங்கத்தவர் எண்ணிக்கை | பெற்றுக் கொடுத்த கடன் தொகை (ரூபா.மில்லியன்) | பெற்றுக் கொண்ட நெல்லின் பெறுமதி | கடன் தவணை செலுத்திய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|---|
| கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 13 | 9 | 19,383,375 | 09 | 388,457 |
| அம்பாந்தோட்டை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 15 | 38 | 52,063,656 | தகவல்கள் கிடைத்திருக்க வில்லை | தகவல்கள் கிடைத்திருக்க வில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குருணாகல் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 19 | 16 | 28,554,134 | 08 | 992,312 |
| அம்பாறை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 13 | 16 | 20,488,719 | தகவல்கள் கிடைத்திருக்க வில்லை | தகவல்கள் கிடைத்திருக்க வில்லை |
| மட்டக்களப்பு மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 12 | 25 | 31,728,488 | 05 | 1,226,157 |
| புத்தளம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 30 | 64 | 113,412,976 | 30 | 5,686,635 |
| அநுராதபுரம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 25 | 59 | 38,801,389 | 21 | 2,247,595 |
| பொலனறுவை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 62 | 206 | 387,140,964 | தகவல்கள் கிடைத்திருக்க வில்லை | தகவல்கள் கிடைத்திருக்க வில்லை |

மேற்கூறிய தகவல்களுக்கமைய 2019 ஏப்ரல் தொடக்கம் நவம்பர் 30 ஆம் திகதி வரையிலுள்ள காலப் பகுதியினுள் இந்த வேலைத் திட்டத்துடன் தொடர்புடைய 05 வரையறுக்கப்பட்ட மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் 73 அங்கத்தவர்களுக்காக ரூபா. 10,541,156 தொகை வங்கிக் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

மாவட்டச் சங்க மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்

**(அ) அம்பாறை மாவட்டம்**

ஒப்பந்தத்தின் பிரகாரம் அம்பாறை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் அங்கத்துவ ஆலை உரிமையாளர்களுக்கு குற்றப்படும் நெல்லின் அளவை அடிப்படையாகக் கொண்டு அரைத்தல் கட்டணம் செலுத்த வேண்டி இருப்பினும், 2019 நவம்பர் 06 ஆம் திகதி வரையிலும் குற்றப்பட்ட 553,085 கிலோகிராம் நெல்லிற்குரிய குற்றல் கூலியான ரூபா. 1,106,170 தொகைப் பணம் குறித்த ஆலை உரிமையாளர்களுக்கு செலுத்தப்படவில்லை.

**(ஆ) பொலனறுவை மாவட்டம்**

ஆலை உரிமையாளர்களுக்காகக் கொள்வனவு செய்யப்படும் நெல் அரிசியாக்கப்பட்டு குறிக்கப்பட்டுள்ள சதவீதத்திற்கு அமைய அரிசி கூட்டுறவுச் சங்கத்திற்கு கையளிப்புச் செய்ய வேண்டியதுடன், அதற்காக ஆலை உரிமையாளர்களுக்கு அரைத்தல் கட்டணம் செலுத்துவதற்கு அமைச்சின் வழிகாட்டலுக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்தச் சங்கத்தின் கணக்காய்வுத் திகதியான 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் 8,819,766 கிலோகிராம் நெல்லுக்கு ஒரு கிலோகிராமிற்கு ரூபா. 6 வீதம் ஆலை உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய அரைத்தல் கட்டணம் ரூபா. 52,918,596 செலுத்துவது புறக்கணிக்கப்பட்டிருந்தது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் இந்த நிலைமைகள் திருப்தியற்றதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.5.3.5 வேலைத் திட்டத்தின் ஊடாக அரிசி ஆலை உரிமையாளர்களின் வங்கிகளின் கடன் மீதிகளை மீளச் அசலுத்துவதற்கு உதவுதல்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மிக விரைவில் கடன் நிவாரணம் வழங்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் PS/NC-04/CP/41/2019 இல் இலக்கம் 03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நவீன முறைமையின் ஊடாக மீண்டும் சந்தைக்கு பிரவேசிப்பதற்கு (கருத்திற் கொள்ளத்தக்க அளவில்) வசதிகளை வழங்கும் நோக்கில் அவர்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டுறவுச் சங்கத்திற்கு நிதி வழங்குவதற்கும் அதன் மூலம் கிடைக்கும் தொழிற்படு மூலதனத்தைப் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களினால் நெல்லை அரிசியாக்கி கிடைக்கும் வருமானத்தின் மூலம் கடனை மீளச் செலுத்துவதற்கும் பிரேரிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் இந்த வேலைத்திட்டத்தில் தொடர்புடைய அரிசி ஆலை உரிமையாளர்களின் வங்கிக் கடன் நிலுவையாக உள்ள பெறுமதி மற்றும் வேலைத் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகளுக்கு (நெல்லை அரிசியாக்கிப் பெறப்படும் வருமானம் மூலம்) வைப்பிலிடப்பட்ட பணத்தொகை தொடர்பில் கவனத்திற் கொள்ளுகையில் ஒரு சில அரிசி ஆலை உரிமையாளர்கள் தொடர்பாக இந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) கண்டி மாவட்டத்தில் 2019 ஏப்பிரல் மாதம் தொடக்கம் ஒக்டோபர் மாதம் வரையான காலப் பகுதியில் நெல் ஆலை உரிமையாளர்களினால் செலுத்த வேண்டிய கடன் தொகை தவணைத் தொகையில் 97 சதவீதம் அதாவது செலுத்த வேண்டிய கடன் தவணைத் தொகையான ரூபா. 11,737,362 இல் ரூபா. 11,348,906 செலுத்தப்பட முடியாது இருந்தது. இதற்கமைய மேற்கூறிய வேலைத் திட்டம் கண்டி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துகையில் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலும் வரையறுக்கப்பட்ட கண்டி மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தில் நெல் கொள்வனவு செய்யும் ஏடுகளின் படி 03 நெல் ஆலை உரிமையாளர்களினால் 23,754 கிலோகிராம் நெல் ரூபா. 1,008,651 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் எவ்விதமான கடன் தவணையையும் மீளச் செலுத்தத் தவறியிருந்தது. அதற்கமைய கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையில் பெறப்பட்ட அரைத்தல் கட்டணம் ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன் தொகையை மீளச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 தொடர்புடைய நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படும் செயல்கள்

### 3.6.1 உணவு ஆணையாளரினால் பேணப்பட்டு வரும் தரவு ஒழுங்கமைப்பு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் பிரகாரம் அனைத்து அரிசி உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களைக் கண்காணிப்பதற்குக் கணிணி வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்க செயலாளர்கள் மற்றும் நெல் விற்பசைன் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் போன்று ஆலை உரிமையாளர்களின் நெல் கொள்வனவு செய்யும் செயற்பாடும் உள்ளடக்கப்படும் வகையில் இந்த

வேலைத் திட்டத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் முன்னேற்றத்தின் கண்காணிப்பு இந்தக் கணிணி வேலைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் இந்தத் தரவு ஒழுங்கமைப்பை பராமரித்துச் செல்லல் மற்றும் தரவு ஒழுங்கமைப்பின் முழுமையான கண்காணிப்பு உணவு ஆணையாளரின் வசமாகும்.

இது தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உணவு ஆணையாளரினால் பராமரிக்கப்படும் தரவு ஒழுங்கமைப்பினால் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் மொத்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

**i. நெல் கொள்வனவு செய்யும் செயற்பாட்டிற்குரிய விபரங்கள் பின்வருமாறு ஆகும்**

| **மாவட்ட கூட்டறவுச் சங்கம்** | **உணவுத் திணைக்களத்தில் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய - நெல் கொள்வனவு செய்தல்** | | **வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத் தகவல்களுக்கு அமைய - நெல் கொள்வனவு செய்தல்** | |
|---|---|---|---|---|
| | **தொகை (கி.கி)** | **பெறுமதி (ரூபா.)** | **தொகை (கி.கி)** | **பெறுமதி (ரூபா.)** |
| பொலனறுவை | 8,788,591 | 387,140,964 | 9,341,091 | 413,043,335 |
| அம்பாறை | 499,946 | 20,488,719 | 566,585 | 22,775,586 |
| குருணாகல் | 685,223 | 28,554,134 | 673,373 | 28,056,434 |
| அம்பாந்தோட்டை | 1,327,624 | 52,063,656 | 1,362,368 | 53,420,621 |
| மட்டக்களப்பு | 758,396 | 31,728,488 | 1,009,186 | 42,216,097 |
| அநுராதபுரம் | 952,273 | 38,801,389 | 1,143,551 | 46,622,112 |
| புத்தளம் | 2,615,955 | 113,412,976 | 2,751,215 | 119,581,988 |
| கண்டி | 471,110 | 19,383,375 | 370,630 | 15,643,745 |
| **மொத்தம்** | **16,099,118** | **691,573,701** | **17,217,999** | **741,359,918** |

உணவுத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய அந்த வேலைத் திட்டத்தின் கீழ் 8 மாவட்ட சங்கங்களின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த நெல்லின் அளவு 16,099,118 கிலோகிராம் மற்றும் அதன் பெறுமதி ரூபா. 691,573,701 ஆகும். அவ்வாறு இருப்பினும் வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய 8 மாவட்ட சங்கங்களின் ஊடாகக் கொள்வனவு

செய்யப்பட்டிருந்த நெல்லின் அளவு 17,217,999 கிலோகிராம் ஆகவும் மற்றும் அதன் பெறுமதி ரூபா. 741,359,918 ஆகவும் உள்ளது. அதற்கமைய உணவுத் திணைக்களத்தின் தகவல்கள் மற்றும் குறித்த சங்கத்தின் தகவல்களுக்கு அமைய நெல் கொள்வனவு செய்கையில் 1,118,881 கிலோகிராம் மற்றும் பெறுமதி ரூபா. 49,786,217 இற்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**ii.** முழு வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த அரிசி விற்பனை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு ஆகும்.

| | **உணவுத் திணைக்களத்தில் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய** | | **வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத் தகவல்களுக்கு அமைய அரிசி விற்பனை** | |
|---|---|---|---|---|
| **மாவட்ட கூட்டுறவுச் சங்கம்** | **அரிசி விற்பனை** | | **அரிசி விற்பனை** | |
| | **தொகை (கிலோ கிராம்)** | **பெறுமதி (ரூபா.)** | **தொகை (கிலோ கிராம்)** | **பெறுமதி (ரூபா.)** |
| பொலனறுவை | 6,741,211 | 535,283,331 | 5,759,520 | 454,239,060 |
| அம்பாறை | 548,790 | 39,200,318 | 1,569,590 | 121,991,132 |
| குருணாகல் | 106,095 | 7,908,690 | 361,275 | 26,796,092 |
| அம்பாந்தோட்டை | 237,450 | 15,393,040 | 530,455 | 40,802,075 |
| மட்டக்களப்பு | 415,670 | 32,145,703 | 229,850 | 16,722,353 |
| அநுராதபுரம் | 298,455 | 22,166,980 | 297,760 | 21,218,310 |
| புத்தளம் | 3,898,770 | 300,740,507 | 252,800 | 16,481,440 |
| கண்டி | 228,399 | 16,563,624 | 220,830 | 16,407,155 |
| **மொத்தம்** | **12,474,840** | **969,402,193** | **9,222,080** | **714,657,617** |

உணவுத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த வேலைத் திட்டத்தின் கீழ் மொத்தமாக விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவு 12,474,840 கிலோகிராமாக இருப்பதுடன் அதன் பெறுமதி ரூபா. 969,402,193 ஆகும். அவ்வாறு இருப்பினும் வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய அரிசி விற்பனையானது 9,222,080 கிலோகிராமாக உள்ளதுடன் அதன் பெறுமதி ரூபா. 714,657,617 ஆகும். அதற்கமைய அரிசி விற்பனை தொடர்பில் மேற்கூறிய இரு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் தொகை தொடர்பில் 3,252,760 கிலோகிராம் வேறுபாடும் பெறுமதி தொடர்பில் ரூபா. 254,744,576 வேறுபாடும் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை வேலைத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு

போன்றே சரியான முடிவுகளை எடுப்பதிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் காரணியாகும்.

(ஆ) அவ்வாறே வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் உரிய தரவுகள் உணவு ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கையில் ஒரே தரவுகளைப் பல தடவைகள் உள்ளிடுதல், தொகுதி எண்ணிற்கு இருப்பு (Stock) தொகையைக் குறிப்பிடுதல், ஒரு அரிசி வகைக்கு ஒரு பெயரைப் பயன்படுத்தல், அங்கத்துவ சங்கங்களின் குறியீடுகளைப் பிழையாக குறிப்பிட்டு அனுப்புதல் போன்ற பல்வேறு குறையாடுகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) உணவு ஆணையாளரினால் கணிணி ஒழுங்கமைப்பு தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஒழுங்கமைப்பினை நடைமுறைப்படுத்துகையில் காணப்படும் ஒழுங்கீனமான குறைபாடுகளை திருத்தம் செய்வதற்கு உடனடியாக உரிய தரப்பினரிடம் அறிக்கையிட வேண்டியிருந்ததுடன் முழுமையான வேலைத்திட்ட முன்னேற்றத்தை செயற்பாட்டுக் குழுவிடம் அறிக்கையிடப்பட வேண்டும். அவ்வாறாயினும் இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் அனைத்து மாவட்ட சங்கங்களின் நடவடிக்கைகளுக்குரிய தகவல்களை தீர்மானிக்கப்பட்ட வகையில் உணவு ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை உரிய முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளுக்குத் தடையாக உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு உடனடியாகக் கடன் நிவாரணம் வழங்குவதற்கு மாவட்ட செயலாளர், மாவட்ட உதவிக் கூட்டுறவுச் சங்க ஆணையாளர் மற்றும் மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்களின் சங்கங்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய கண்காணிப்பு நடவடிக்கைக்கு சரியான தகவல்களை வழங்குவதற்கு மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் கட்டுப்பட்டுள்ளனர். அவ்வாறிருப்பினும் மேற்கூறிய வகையில் முறையாகத் தகவல்களை வழங்காததால் அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒப்பந்தத்திற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுத்திருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.6.2 வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம்

வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கமானது 1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமாக உள்ளதுடன் கூட்/60 இலக்கத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் பணிப்பாளர் குழு 09 பேரைக் கொண்டதாக உள்ளதுடன் ஆரம்பத்தில் கூட்டுறவு ஆணையாளரினால்

நியமிக்கப்படும் உத்தியோகத்தரையும் மற்றும் அந்தந்த சங்கங்களின் 08 பிரதிநிதிகளையும் கொண்டதாக உள்ளது. வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டத்துடன் தொடர்புபட்டுள்ள முறைகள் தொடர்பில் பின்வருவன அவதானிப்பட்டன.

**(அ) உரிய வழிகாட்டலுக்கமைய நடவடிக்கை எடுத்தல்**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதற்கு உரியதான விவசாய, கிராமியப் பொருளாதார நடவடிக்கை, கால்நடை வள அபிவிருத்தி, நீர்பாசன மற்றும் மீன்பிடி மற்றும் நீர் வள அமைச்சின் செயலாரினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் மேற்கூறிய சங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது உணவு ஆணையாளரினால் தயாரிக்கப்படும் கணிணி வேலைத் திட்டத்திற்குத் தேவையான தரவுகளை வழங்குவதாகும்.

அவ்வாறாயினும் இந்த வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் அனைத்து மாவட்ட அங்கத்தவர்களுடன் வேறாக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இது தொடர்பில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மாவட்டச் செயலாளர், உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரிசி ஆலை சங்கங்கள் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் அது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுடன் மேற்கூறிய சங்கம் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

i. 2019 பெரும் போகத்தில் நெல் தொகையினைக் கொள்வனவு செய்து அரிசியாக மாற்றி சந்தைக்கு வழங்குவது தொடர்பில் 2019.03.23 ஆம் திகதி தொடக்கம் 2019.10.20 ஆம் திகதி வரையான காலத்தில் செயற்படுத்தப்படும் வகையில் தரப்பினரால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

ii. அரிசியினது விலையைத் தீர்மானிக்கையில் இரண்டாம் தரப்பினர் உள்ளிட்ட அனைத்து அங்கத்துவ சங்கங்களினால் உற்பத்தி செய்யப்படும் அரிசி உற்பத்தியின் விலையைத் தீர்மானிக்கையில்

முழுமையான அதிகாரம் முதலாவது தரப்பினருக்கு (பொது சங்கம்) உரித்தாவதுடன், முதலாவது தரப்பினரால் தீர்மானிக்கப்படும் விலையின் கீழ் மட்டுமே அரிசி விற்பனை செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

iii. **சங்கத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட நிதி**

வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் மற்றும் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் சங்கம் என்பவற்றுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தினால் 2019 பெரும் போகத்தின் போது மேற்கூறிய செயற்றிட்டத்திற்காக வட்டியற்ற மூலதனத்தை வழங்குவதோடு இரண்டாவது தரப்பினரால் பெற்றுக் கொள்ளப்பட்ட அதன் மூலதனத் தொகைக்காக வருடாந்தம் பத்து சதவீத சேவைக் கட்டணமொன்று முதலாவது தரப்பினருக்கு செலுத்துவதற்கு இரண்டாம் தரப்பினர் இந்த ஒப்பந்தத்தின் வாக்குறுதிக்குக் கட்டுண்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்துபவர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கமைய கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டிருந்த எட்டு கூட்டுறவுச் சங்கங்களில் 2 சங்கங்கள் ஒரு வருடத்திற்கு பத்து சதவீதம் வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு மாதத்திற்கான வட்டியாக ரூபா. 458,333 வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்கு செலுத்தி இருந்தது. விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| சங்கத்தின் பெயர் | கட்டணம் செலுத்திய திகதி | கணக்கீடு செய்தல் | செலுத்திய தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| i. வரையறுக்கப்பட்ட புத்தள மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2019.06.12 | 20,000,000x10/100x1/12 | 166,687 |
| ii. வரையறுக்கப்பட்ட அநுராதபுரம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2019.07.03 | 35,000,000x10/100x1/12 | 291,666 |
| | | | ----------- |
| | | | 458,353 |
| | | | ====== |

அவ்வாறிருக்க 2019 ஒக்டோபர் 28 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டாவது ஒப்பந்தத்தின் 31 ஆம் பிரிவின் மூலம் மாதாந்தம் ரூபா. 100,000 கட்டணமொன்று செலுத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்கி இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) கொடுப்பனவு மற்றும் ஏனைய பணக் கொடுக்கல் வாங்கல்கள்**

2019 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டது.

(i) 2019 நவம்பர் 30 ஆம் திகதி 25 சந்தர்ப்பங்களில் நாளொன்றுக்கு ரூபா. 51,026,288 பெறுமதியான கொடுப்பனவிற்கான கொடுப்பனவு வவுச்சர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 1)

(ii) சங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற கொடுப்பனவு வவுச்சர்களுக்குத் தொடர் இலக்கம் இடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2019 நவம்பர் 30 ஆம் திகதியில் தீர்மானிக்கப்படாத கணக்கில் ரூபா. 1,298,325 வரவு மீதியொன்று காணப்பட்டதுடன் வங்கியில் வைப்பிலிடப்பட்ட ஆயினும் அறிந்து கொள்ளப்படாத பண வைப்புக்களினால் அது சேர்ந்துள்ளது.

(iv) 2019 ஏப்பிரல் 09 ஆம் திகதி ரூபா. 80,000 பணப் பெறுகைக்கு உரியதான பற்றுச் சீட்டை சங்கம் வழங்கியிருந்த போதிலும் சங்கத்தின் வங்கிக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) ரூபா. 2,370,265 பண வைப்பு சங்கத்தின் வங்கிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பணப் பெறுகை பற்றுச் சீட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள்**

i. பொலனறுவை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் சங்கத்தின் தலைவரால் செயற்படும் நபரே அனைத்து இலங்கை உற்பத்தியாளர்களின் சங்கத்தின் தலைவராகவும் செயற்படுவதோடு, பொலனறுவை மாவட்ட கூட்டுறவுக் சங்கத்தின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவராக பதவி வகிப்போரே அனைத்து இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தில் முறையே செயலாளர் மற்றும் பொருளாளராக செயற்படுகின்றனர். இதற்கமைய

பொலனறுவை மாவட்டக் கூட்டுறவுக் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவராகப் பதவி வகிக்கும் மூவர் அனைத்து இலங்கை அரிசி உற்பத்தி கூட்டுறவுக் சங்கத்தின் பிரதான மூன்று பதவிகளையும் வகித்து இந்த இரு சங்கங்களினதும் நிர்வாகத்தை மேற்கொண்டு வந்துள்ளனர்.

ii. பொலனறுவை மாவட்ட கூட்டுறவுக் சங்கத்தின் தலைவரினால் மாவட்டச் செயலாளரினால் கடன் தொகையை விடுவித்துக் கொண்ட பின் பொலனறுவை மாவட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளரின் மற்றும் மாவட்டச் செயலாளரின் அறிவுரைகளுக்குப் புறம்பாக தமது தற்றுணிவின் படி செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

iii. இந்தக் சங்கத்தின் தலைவர் துணைச் சட்டம் மற்றும் கூட்டுறவுச் சட்டம் மற்றும் பொதுச் சட்டம் என்பவற்றை மீறி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளதால், கூட்டுறவுக் சங்க சாசனத்திற்கு அமைவாக பரீட்சியல் மேற்கொள்வதற்கு வடமத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(உ) கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் அரிசி வழங்கப்படாத காரணத்தால் தண்டப் பணம் அறவிடுதல்**

08 மாவட்ட கூட்டுறவுக் சங்கங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட அரிசி இலங்கை சதொச நிறுவனத்திற்கு வழங்கப்படுவது வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் (பொதுச் சங்கம்) மூலமாகும். இவ்வாறு சங்கத்தினால் அரிசி விற்பனை செய்கையில் உடன்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் இலங்கை சதொச நிறுவனத்திற்கு அரிசி வழங்கப்படாமையால் ரூபா. 3,517,502 தண்டப்பணமாக அறவிடப்பட்டிருந்தது. இவ்வாறு இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் மாவட்ட கூட்டுறவு சங்கத்துடன் முறையான தொடர்பின்றி சதொச நிறுவனத்தின் கொள்முதல் நடவடிக்கையில் ஈடுபட்டதனால் ரூபா. 3,517,502 நட்டம் 08 மாவட்டக் சங்கங்களுக்கு ஏற்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு

| கேள்விப் பத்திர இலக்கம் | வழங்கப்படும் நிறுவனம் | தொகை |
|---|---|---|
| --------------- | ------------------------ | ---------- |
| | | (ரூபா.) |
| Q/PRO/P/19/020 | இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 918,524 |
| Q/PRO/P/19/021 | இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 2,154,685 |
| Q/PRO/P/19/026 | இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 257,871 |
| Q/PRO/P/19/036 | இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 101,858 |
| Q/PRO/P/19/039 | இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | 84,564 |
| மொத்தம் | | ------------<br>3,517,502 |

### 3.6.3 முறையான ஒப்பந்தங்களை ஏற்படுத்தி நடவடிக்கை எடுத்தல்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்குவதற்கு உரிய முறைமைகள் தொடர்பான வழிகாட்டல் (2)vii இற்கு அமைய வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் சங்கம் மற்றும் அங்கத்தவர் இடையே சட்ட ரீதியான ஒபப்ந்தமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) வழிகாட்டலில் (3)iv இன் படி ஆலை உரிமையாளர்களினால் பெறப்பட்ட கடனுக்காகச் செலுத்த வேண்டிய மாதாந்த வங்கித் தவணையை உரிய வங்கிக்கு செலுத்த வேண்டியதுடன் மீதித் தொகையை ஆலை உரிமையாளருக்குச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருப்பினும், வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் சங்கத்தினால் தமது அங்கத்தவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களில் உரிய வங்கித் தவணையைச் செலுத்துதல் மற்றும் மீதி தொகையை அங்கத்தவருக்குச் செலுத்துதல் தொடர்பிலான நிபந்தனை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய, கிராமிய பொருளாதார நடவடிக்கை, கால்டை வளங்கள் அபிவிருத்தி, நீர்பாசனம் மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட கடன் நிவாரணம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய முறைமைகள் தொடர்பான வழிகாட்டல் 2(vii) இன்படி வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுக் சங்கம் மற்றும் அங்கத்தவர் ஆகியோர் இடையே சட்ட ரீதியான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(I) இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது தரப்பினால் ஆலை உரிமையாளர்களுக்கு நெல்லைப் பெற்றுக் கொடுத்த திகதியில் மூன்று நாட்களுக்குள் பச்சை அரிசியும் 05 நாட்களுக்குள் அவித்த அரிசியும் ஒப்படைக்கப்பட்ட வேண்டும். ஆயினும் அங்கத்தவர்கள் சங்கத்திற்கு வழங்கும் அரிசித் தொகையை மிக விரைவில் விற்பனை செய்வதற்கான முறைமைகளை மாவட்ட அரிசி உற்பத்திக் சங்கங்கள் தயாரித்திருக்கவில்லை.

(II) மேற்கூறிய இலக்கம் (I) இன் பிரகாரம் அரிசியை ஒப்படைத்தல் வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் அங்கத்தவர்கள் அரிசியை ஒப்படைத்திருக்காததுடன், அவ்வாறு அரிசியை ஒப்படைத்தல் இடம்பெற்றிருக்குமாயின் நெல்லை அரிசியாக்கும் ஒரு மாதத்தில் 6 தடவைகள் சங்கத்திற்கு அரிசி கிடைக்கும். அவ்வாறு அரிசி விற்பனை செய்து கொள்வதற்கு சரியான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்குமாயின் சங்கத்திற்கு பெற்றுக் கொடுத்த தொழிற்படு மூலதனத்தை

அதிகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு இயன்றிருக்கும். ஆயினும் அவ்வாறான முறைமையொன்று இல்லாமையால் தொழிற்படு மூலதனமாகப் பெற்றுக் கொடுத்திருந்த நிதி பயன்படுத்தப்பட்டிருந்த தடவைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சங்கத்தின் பெயர்** | **பெற்றுக் கொடுத்த தொழிற்படு மூலதனத் தொகை** | **கொள்வனவு செய்த நெல்லின் அளவு** | **கொள்வனவு செய்த நெல்லின் பெறுமதி** | **பெற்றுக் கொடுத்த நிதி பயன்படுத்தப்பட்ட தடவைகள்** |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| கண்டிக் சங்கம் | 10,000,000 | 471,110 | 19,383,374 | 1.93 |
| அநுராதபுரக் சங்கம் | 59,870,000 | 952,273 | 38,801,388 | 0.64 |
| பொலனறுவைக் சங்கம் | 206,000,000 | 8,788,591 | 387,140,964 | 1.87 |
| அம்பாந்தோட்கைட சங்கம் | 38,000,000 | 1,327,624 | 52,063,655 | 1.37 |
| அம்பாறைக் சங்கம் | 16,000,000 | 499,946 | 20,488,719 | 1.28 |
| மட்டக்களப்புக் சங்கம் | 25,000,000 | 758,396 | 31,728,487 | 1.26 |
| குருணாகல் சங்கம் | 16,000,000 | 685,223 | 28,554,134 | 1.78 |
| புத்தளம் | 64,000,000 | 2,615,955 | 113,412,975 | 1.77 |

(III) வரையறுக்கப்பட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் இலங்கை சதொச லிமிடட் நிறுவனத்திற்கு கொள்முதல் முறைமைக்கு அமைய அரிசி விற்பனை செய்யும் நடவடிக்கை இடம் பெற்றிருந்ததுடன், உடன்பட்டிருந்தமைக்கு அமைய குறித்த கால எல்லைக்குள் அரிசித் தொகை தீர்மானிக்கப்பட்ட பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் விற்பனை செய்வதற்கும் முறைமைகளைத் தயாரித்து வழங்குவதற்குத் தவறியிருந்தது.

### 3.6.4 நெல் விற்பனைச் சபையின் களஞ்சியப் பயன்பாடு

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு மிக விரைவில் கடன் நிவாரணம் வழங்குவது தொடர்பில் அப்பொழுது இருந்த கௌரவ ஜனாதிபதியினால் 2019 பெப்ரவரி 11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பத்திர இலக்கம் PS/NC-4/CP/41/2019 கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் நாட்டின் வருடாந்த அரிசித்

தேவைப்பாடு 2.4 மில்லியன் மெட்ரிக் டொன்னாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது எனவும் அதில் அண்ணளவாக 3.6 மில்லியன் மெட்ரிக் டொன் நெல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி குறைந்ததால் விலை அதிகரித்துச் செல்வதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1971 இன் 41 ஆம் இலக்க நெல் விற்பனைச் சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நெல் மற்றும் அரிசி கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல், வழங்குதல் மற்றும் பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே அவர்களின் சேவைகளின் கீழ் உணவைப் பத்திரப்படுத்தும் நோக்கில் பாதுகாப்பினைப் பேணி செல்லுதல், நுகர்வோருக்கு நியாயமான விலையின் கீழ் தரத்தில் உயர்ந்த தானியத்தை வழங்குவதற்கு வேலைத் திட்டமொன்றை ஈடுபடுத்தல், விவசாயிகளுக்கு நெல்லுக்கான உறுதிப்படுத்தப்பட்ட விலையைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன செய்யப்படல் வேண்டும். இந்த நோக்கங்களுக்காகப் பயணிக்கையில் நெல் விற்பனை சபையினால் 2018/2019 பெரும் போகத்தில் எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சிக்கையில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

(இ) நெல் விற்பனைச் சபையின் கீழ் ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் களஞ்சியசாலைக் கொள்வனவு மற்றும் 2018/2019 பெரும் போகத்தின் நெல்லில் கொள்வனவு செய்யப்பட்ட தொகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| வலயம் | களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை | கொள்ளளவு | கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு | கொள்ளளவில் கொள்வனவு செய்யப்பட்ட சதவீதம் | இந்த வேலைத் திட்டத்திற்கு அரிசியின் தேவைப்பாடு | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | மெட்ரிக் டொன் | மெட்ரிக் டொன் | (%) | மெட்ரிக் டொன் | (%) |
| கிழக்கு | 37 | 23,505 | 3,923 | 17 | 3583 | 91 |
| வடக்கு | 39 | 25,200 | 11,643 | 46 | 797 | 7 |
| பொலனறுவை | 36 | 41,460 | 1,489 | 4 | 1489 | 100 |
| அநுராதபுரம் | 74 | 77,125 | 7,399 | 10 | 7200 | 97 |
| அம்பாறை | 65 | 75,020 | 11,635 | 16 | 835 | 7 |
| வடமேற்கு | 27 | 36,020 | 1,724 | 5 | 1723 | 99 |
| தெற்கு | 37 | 39,550 | 10,456 | 26 | 5083 | 48 |
| | 315 | 317,880 | 48,269 | | 20,710 | |

மேற்கூறிய தகவல்களுக்கமைய நெல் விற்பனைச் சபையின் களஞ்சியசாலைக் கொள்ளளவு 317,880 மெட்ரிக்டொன் ஆகும். 2018/2019 பெரும் போகத்தில் நெல் விளைச்சல் 3,072,572 மெட்ரிக் டொன் ஆகும். இதற்கமைய நெல் விற்பனைச் சபைக்கு மொத்த விளைச்சலின் கொள்வனவு செய்யக்கூடிய தொகை 10 சதவீதம் மாத்திரம் ஆகும். ஆயினும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது 48,269 மெட்ரிக் டொன் ஆகும். அதாவது 1.6 சதவீதமான அளவாகும். இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட தொகையில் இந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கான அரிசித் தேவைப்பாடு 20,710 மெட்ரிக் டொன் ஆகும். அதாவது நெல் விற்பனைச் சபை கொள்வனவு செய்த தொகையில் 43 சதவீதம் ஆகும். இதற்கமைய பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

i. நாட்டின் மொத்த நெல் விளைச்சல் நெல் விற்பனைச் சபை கொள்வனவு செய்திருந்தது 2 சதவீத்திலும் குறைவான தொகை என்பதனால் நெல் விவசாயிகளுக்கு நியாயமான விலையின் கீழ் கொள்வனவு செய்யும் தொகை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை.

ii. நாட்டில் பாதுகாப்பான நெல் தொகை அல்லது அரிசித் தொகையைப் பேணாததால் பேரிடரின் போது பொது மக்களின் உணவுப் பாராமரிப்பு ஆபத்துக்குள்ளாகி உள்ளமை.

## 3.7 நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயலாற்றல்

### 3.7.1 அரிசிக்கான நுகர்வுச் செலவு

குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடொன்றிற்கான வருமானம் மற்றும் செலவு ஆய்வில் கடந்த தரவுகளின் படி இலங்கையில் வீட்டுக்கான உணவுகள் சாதாரண மாதாந்த செலவில் அதிக வீதத்தைக் கொள்ளுவது அரிசிக்காக என்பது தெளிவாகின்றது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| உணவுக்கான செலவு | சராசரி மாதாந்த செலவின் சதவீதமாக<br>2002 | 2005 | 2006/7 | 2009/10 | 2012/13 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 18.0 | 13.8 | 13.9 | 17.3 | 13.6 | 12.8 |
| கோதுமை மா | 1.2 | 1.2 | 1.1 | 1.4 | 1.3 | 1.0 |
| பாண் | 4.3 | 3.6 | 3.5 | 3.2 | 3.0 | 2.4 |
| சரக்குப் பொருட்கள் | 9.1 | 9.0 | 9.3 | 9.1 | 9.0 | 9.8 |
| தானியப் பயிர்கள் | 3.2 | 3.4 | 3.5 | 4.1 | 3.5 | 3.6 |
| மரக்கறி | 7.9 | 8.1 | 8.4 | 7.6 | 8.2 | 8.0 |
| தேங்காய் | 7.3 | 5.6 | 5.5 | 5.6 | 6.1 | 5.7 |
| இறைச்சி | 3.2 | 4.4 | 4.2 | 3.9 | 4.3 | 4.8 |
| மீன் | 6.3 | 8.5 | 8.6 | 8.8 | 9.1 | 9.5 |
| கருவாடு | 3.7 | 3.8 | 4.0 | 3.7 | 4.2 | 4.0 |
| பால் மற்றும் பாலுணவு | 8.4 | 9.9 | 8.7 | 7.8 | 8.9 | 8.2 |
| முட்டை | 0.8 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.1 |
| பழங்கள் | 3.6 | 3.9 | 3.4 | 2.9 | 2.9 | 3.2 |
| சீனி | 3.3 | 3.3 | 3.6 | 3.4 | 2.9 | 2.2 |
| ஏனைய உணவு மற்றும் பானங்கள் | 19.6 | 20.3 | 21.2 | 20.1 | 21.8 | 23.6 |
| **மொத்தம்** | **100** | **100** | **100** | **100** | **100** | **100** |

இதற்கமைய 21 மில்லியன் அளவான இலங்கை மக்களின் பிரதான உணவிற்கு மாதாந்த சாதாரண செலவில் 13 சதவீதமான அதிகமான செலவினம் மேற்கொள்ளப்படுவது அரிசி நுகர்விற்கு ஆகும்.

அதற்கமைய விவசாயிகளுக்கு நியாயமான விலையினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நுகர்வோருக்கு நியாயமான விலையினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இந்தப் பொறிமுறையை உறுதிப்படுத்த முடியும்.

குறித்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் சிக்கல்கள் நிறைந்த நிலைமைகள் ஏற்பட்ட போதிலும், வேலைத் திட்டம் சரியான முறையில் கண்காணிப்பிற்கு உட்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் முழுமையாக எட்டுவதற்கு முடியாதிருந்தது.

### 3.7.2 அரிசி விலைக் கட்டுப்பாட்டிற்கு பங்களிப்பு செய்தல்

இந்த வேலைத் திட்டத்திற்கு 2019.12.31 ஆம் திகதி வரையில் அரசாங்கத்தினால் ரூபா. 434.87 மில்லியனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிதி விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த நிதியைப் பயன்படுத்தி 2018/19 பெரும் போகத்தில் மொத்த நெல் விளைச்சலான 3,072,581 அமட்ரிக் டொன்னில் 08 மாவட்ட சங்கங்களினால் 16,099.11 மெட்ரிக் டொன் அதாவது 0.52 சதவீதம்

கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல் தொகையில் சந்தைத் தேவைப்பாட்டில் விநியோகிக்கப்பட்ட அரிசியானது 10,558.42 மெட்ரிக் டொன் ஆகும். இந்த தொகை மற்றும் ஒழுங்கமைந்த வாழ்கைச் செலவுக் குழுவினால் 2019 ஏப்பிரல் 01 ஆம் திகதி தொடக்கம் ரூபா. 85 ஆக அரிசிகான உச்சபட்ச விலையினைத் தீர்மானித்தலும் நுகர்வோர் சேவை அதிகாரசபையினால் கட்டுப்பாட்டு விலையை விடக் கூடிய விலைக்கு அரிசி விற்பனை செய்வோர் தொடர்பில் சுற்றி வளைப்பு செய்தலுடன் உள்நாட்டுச் சந்தையில் அரிசி விலை ரூபா. 100 இற்கும் குறைவாக காலத்திற்கு மட்டும் கீழிறங்கிக் காணப்பட்டது.

| | | ஜன. | பெப். | மார்ச் | ஏப். | மே | ஜூன் | ஜூலை | ஓக. | செப். | ஒக். | நொ. | திசெ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கொழும்பு** | 2017 | 97 | 96 | 94 | 96 | 97 | 98 | 98 | 102 | 102 | 105 | 106 | 109 |
| | 2018 | 111 | 110 | 110 | 113 | 114 | 113 | 113 | 111 | 112 | 114 | 115 | 115 |
| | 2019 | 108 | 107 | 105 | 101 | **96** | 95 | 91 | 90 | 93 | 98 | 100 | 105 |
| **கண்டி** | 2017 | 99 | 91 | 89 | 91 | 94 | 98 | 99 | 99 | 103 | 104 | 104 | 108 |
| | 2018 | 111 | 111 | 111 | 112 | 111 | 112 | 115 | 115 | 115 | 111 | 110 | 112 |
| | 2019 | 111 | 109 | 107 | 108 | **105** | 100 | 92 | 93 | 93 | 96 | 99 | 100 |
| **மாத்தறை** | 2017 | 109 | 106 | 105 | 99 | 103 | 104 | 102 | 106 | 104 | 106 | 104 | 105 |
| | 2018 | 107 | 100 | 103 | 110 | 115 | 118 | 107 | 108 | 120 | 118 | 122 | 120 |
| | 2019 | - | - | 107 | - | **99** | - | 90 | 97 | 91 | 92 | 97 | 100 |
| **அநுராதபுரம்** | 2017 | 97 | 90 | 92 | 91 | 93 | 98 | 99 | 98 | 102 | 104 | 107 | 108 |
| | 2018 | 108 | 109 | 109 | 108 | 109 | 110 | 108 | 110 | 111 | 109 | 112 | 114 |
| | 2019 | 110 | 110 | 109 | 97 | **94** | 93 | 94 | 93 | 93 | 95 | 99 | 100 |

### 3.7.3 நிகழ்ச்சித்திட்டத்தினால் அரிசியின் விலையில் ஏற்பட்ட தாக்கம்

#### 3.7.3.1 அரிசி விலையின் போக்கு தொடர்பில் 2019 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கை தரவுகள்

(அ) 2019 இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் தரவுகளுக்கு அமைய 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டு கால எல்லைக்குள் சம்பா அரிசியின் விலை அதிகரிப்பு 2009 ஆம் ஆண்டிற்கு 2010 ஆம் ஆண்டில் 0.52 சதவீதத்தால் அதிகரித்து இருப்பினும், ஏனைய ஆண்டுகளில் விலை குறைந்தே காணப்பட்டது. ஆயினும் 2014 ஆம் ஆண்டு தெடக்கம் 2018 ஆம் ஆண்டு வரைலயான 05 ஆண்டு கால எல்லைக்குள் சம்பா அரிசி விலை தொடர்ச்சியாக அதிகரித்துச்

சென்றுள்ளதுடன், அது 2018 ஆம் ஆண்டில் ரூபா. 112.67 வரையான உச்சபட்ச விலையை எட்டி இருந்தது. 2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா. 83.83 விலையுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் விலை அதிகரிப்பு 34.40 சதவீதம் ஆகும்.

(ஆ) மேலும் மேற்கூறிய மத்திய வங்கி அறிக்கையின் தரவுகளுக்கு அமைய ஒரு கிலோ கிராம் பச்சை அரிசியின் விலை 2009 ஆம் ஆண்டில் ரூபா. 61.65 ஆக இருந்த போதும் 2013 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்குள் அறிக்கையிடப்பட்டிருந்த உச்சபட்ச விலை ரூபா. 58.33 ஆகும். அதற்கமைய 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பச்சை அரிசியின் விலை குறைவினைக் காட்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா. 71.92 ஆக இருந்த ஒரு கிலோகிராம் அரிசியின் விலை 2017 ஆம் ஆண்டில் ரூபா. 86 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தது. அது 2014 ஆம் ஆண்டின் விலையுடன் ஒப்பிடுகையில் 19.57 சதவீத விலை அதிகரிப்பாகும்.

(இ) அவித்த அரிக்கான 2009 ஆம் ஆண்டில் சாதாரண விலையான ரூபா. 63.24 விலை 2012 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாக குறைவடைந்து சென்றுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளது.

### 3.7.3.2 அரிசி விலை தொடர்பான தற்போதைய போக்கு

(அ) ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான கால எல்லைக்குள் அரிசி விலை தொடர்பில் சேகரித்திருந்த தரவுகளின் அடிப்படையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, அநுராதபுரம் ஆகிய 04 மாவட்டங்களில் சம்பா அரிசியின் விலை 2017 ஓகஸ்ட் மாதம் தொடக்கம் 2019 ஏப்பிரல் மாதம் வரையான கால எல்லைக்குள் ரூபா. 102 இற்கும் ரூபா. 115 இற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. ஆயினும் 2019 ஆம் ஆண்டில் இந்த வேலைத் திட்டம் செயற்பட ஆரம்பித்த மே மாதம் தொடக்கம் சம்பா அரிசியின் விலை ரூபா. 100 இற்கும் குறைவான விலையே அறிக்கையிடப்பட்டிருந்துடன், ஆகக் குறைந்தது ரூபா. 90 வரையிலும் குறைவடைந்திருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய நடவடிக்கை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட அரிசி விலை தொடர்பான தரவுகளுக்கு அமைய 2019 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரையிலும் இலங்கையினுள் 18 பிரதான நகரங்களின் அரிசி விலையைக் கவனத்திற் கொள்ளுகையில் ரூபா. 97 – 116 இற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்படுவதுடன் 2019 மே தொடக்கம் அது ரூபா. 105 வரையான குறைந்த பெறுமதி அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், ஆகக் குறைந்த விலையாக ரூபா. 90 அறிக்கையிடப்பட்டிருந்தது. மிகக் கூடிய விலை காணப்பட்ட அரிசிச் சந்தையில் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட உச்சபட்ச விலை எல்லையின் கீழ் மாவட்ட கூட்டுறவுக் சங்கங்களினால் அரிசி விற்பனைக்காக சமர்ப்பிக்கப்படுவதனால் அரிசி விலையில் ஒரளவு குறைவு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| | பிரதேசம் | ஜன. | பெப். | மார்ச் | ஏப். | மே | ஜூன் | ஜூலை | ஓக. | செப். | ஒக் | நவ | திசெ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 108 | 107 | 105 | 101 | **96** | 95 | 91 | 90 | 93 | 98 | 100 | 105 |
| 2. | கம்பஹா | 108 | 109 | 109 | 97 | **93** | | | | 92 | 95 | 97 | - |
| 3. | கண்டி | 111 | 109 | 107 | 108 | **105** | 100 | 92 | 93 | 93 | 96 | 99 | 100 |
| 4. | தெஹிஅத்தகண்டிய | 108 | 108 | 108 | 86 | 106 | 96 | 92 | 93 | 93 | 95 | 97 | - |
| 5. | ஹங்குரன்கெத்த | 110 | 110 | 100 | | | | 95 | 98 | 94 | 96 | 98 | - |
| 6. | குருணாகல் | 110 | 110 | 110 | 98 | **95** | 95 | 94 | 93 | | 94 | 96 | - |
| 7. | யாழ்ப்பாணம் | 116 | 116 | | 100 | **95** | 96 | 88 | | | | 98 | - |
| 8. | அநுராதபுரம் | 110 | 110 | 109 | 97 | **94** | 95 | 94 | 93 | 93 | 95 | 99 | 100 |
| 9. | அம்பாந்தோட்டை | 112 | 112 | 108 | 97 | **95** | 94 | 93 | 93 | 92 | 99 | 101 | - |
| 10. | இரத்தினபுரி | 110 | 107 | 111 | 97 | **95** | 93 | 89 | 96 | 94 | 96 | 99 | - |
| 11. | பதுளை | 108 | 109 | 106 | 98 | 99 | 95 | 91 | | | | - | - |
| 12. | காலி | 110 | 109 | 108 | 111 | **99** | 95 | 95 | 92 | 91 | 94 | - | - |
| 13. | அம்பாறை | 109 | 105 | 104 | 109 | **98** | 96 | 95 | | | | - | - |
| 14. | தம்புள்ளை | 109 | 109 | 107 | 97 | **93** | 94 | 92 | 91 | 92 | | - | - |
| 15. | மட்டக்களப்பு | 117 | 116 | 105 | 105 | **103** | 99 | | | | | - | - |
| 16. | கேகாலை | 113 | 112 | 109 | 107 | **97** | 95 | 92 | 91 | 92 | | - | - |
| 17. | எம்பிலிபிட்டிய | 106 | 106 | 102 | 101 | **101** | 99 | 93 | 94 | 96 | - | - | - |
| 18. | திஸ்ஸமகாராம | 113 | 112 | 107 | 111 | **100** | 97 | 95 | - | - | - | - | - |

### 3.7.4 அரிசிச் சந்தையின் போட்டித் தனிமை

இலங்கை அரிசிச் சந்தையானது வியாபாரிகள் ஒரு சிலரின் கட்டுப்பாட்டில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு நோக்கமானது நுகர்வோருக்கு அரசாங்கத்தின் உச்ச பட்ச சில்லறை விலையின் கீழ் அரிசியைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதாகும். அதற்கமைய இந்த வேலைத் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் அரிசி இலங்கை சதொச மற்றும் 4 பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே நுகர்வோர் அதிகாரசபையினால் அரிசிக்காக சட்டமாக்கப்பட்டிருந்த உச்சபட்ச சில்லறை விலையை மீறி அரிசி விற்பனை

செய்தல் சந்தையில் பெருமளவில் காணக் கிடைத்ததுடன், இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சட்டமாக்கப்பட்டிருந்த உச்சபட்ச சில்லறை விலையின் கீழ் ரூபா. 103,051,629 பெறுமதியான 1,286,358 கிலோகிராம் அரிசி 05 பிரதான பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டிருந்தது.

### 3.7.5 நெல் கொள்வனவில் அரசாங்கத்தின் தலையீடு

இந்த வேலைத் திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் ஒரு கிலோகிராம் நெல் (சம்பா) ரூபா. 41 வீதம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதாக அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. நெல் கொள்வனவின் போது பாரியளவிலான ஆலை உரிமையாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட விலையை விட கூடிய விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்தததால் மாவட்டக் சங்கங்களுக்கு அரிசி பெற்றுக் கொள்ள நெல்லைக் கொள்வனவு செய்ய முடியவில்லை. இதன் காரணமாக அரசாங்கம் தலையிட்டு மாவட்டச் செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள நெல் விற்பனை சபைக் களஞ்சியசாலைகளில் ஒரு கிலோ கிராம் நெல் ரூபா. 48 வீதம் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கபபட்டது.

அரசாங்கத்தினால் நெற் பயிற்ச்செய்கையைக் கட்டியெழுப்புவதற்கு விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல்லைப் பெற்றுக் கொடுத்தல், பயிற்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு தேவையான நீரைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பயிற்செய்கை நடவடிக்கைகளுக்குத் தேவையான உர மானியம் பெற்றுக் கொடுத்தல், கடன் பெற்றுக் கொடுத்தலுக்கு பாரிய செலவினைத் தாங்கியுள்ளது. அவ்வாறே விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை உறுதிப்படுத்தப்பட்ட விலையின் கீழ் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிவாரணம் விவசாயியைப் போன்றே நுகர்வோரையும் சென்றடைதல் வேண்டும்.

அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையும் (கிடைக்கப் பெற்றுள்ள புள்ளிவிபரவியல் தரவுகளின் அடிப்படையில்) உரத்திற்காக ரூபா. 9,795 மில்லியன் தொடக்கம் 39,787 மில்லியன் வீச்சில் செலவும், காப்புறுதி நட்ட ஈட்டிற்காக ரூபா 5.1 மில்லியன் தொடக்கம் ரூபா. 184.6 மில்லியன் வீச்சிலும் தங்கியிருந்ததுடன், அதன் கால எல்லைக்காக நெற் பயிற்ச் செய்கைக்கு கடன் மானியமாக ரூபா. 1,918 மில்லியன் தெடக்கம் ரூபா. 6,879 மில்லியன் வரையான வீச்சினுள் அரசாங்கம் செலவு செய்திருப்பினும் அரசாங்கத்தின் மூலம் அவ்வாறான பங்களிப்பை வழங்கி நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், நெல் விளைச்சல் பாரிய அளவிலான ஆலை உரிமையாளர்கள் சிலரினால் கட்டுப்படுத்தப்படுகின்றமையினால் விவசாயி, நுகர்வோர் மற்றும் அரிசி உற்பத்தியாளர் ஆகிய மூன்று பிரிவினருக்கு நியாயமான சந்தை உரித்திற்று

உள்ளது. அதனால் அரிசிச் சந்தையை நிர்வகிப்பதற்கு மேற்கூறிய செலவினை மேற்கொள்ளுவதற்கு மேலதிகமாக, மேற்கூறிய தரப்பினரின் முன்னேற்றத்திற்காக அரிசிச் சந்தையை முகாமைத்துவப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு அரசின் தலையீடு அவசியமானது என்பது இங்கு தெளிவாக காணமுடிகிறது.

| ஆண்டு | உரத்தின் அளவு | உரத்திற்கான செலவு | நெற்பயிற்ச் செய்கைக்காக வழங்கப்பட்டுள்ள கடன் | காப்புறுதி நட்டஈடு வழங்கல் |
|---|---|---|---|---|
| ---------- | -------------------- | ------------------ | --------------------- | --------------------- |
| | மெ.தொன். ஆயிரத்தில் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2009 | 423 | 23,117.92 | 1,918 | 15.4 |
| 2010 | 490 | 20,277.69 | 2,541 | 15.3 |
| 2011 | 453 | 37,444.33 | 4,418 | 184.6 |
| 2012 | 412 | 31,942.85 | 5,527 | 78.3 |
| 2013 | 363 | 9,795.54 | 5,427 | 136.2 |
| 2014 | 272 | 15,170.75 | 4,762 | 55.2 |
| 2015 | 341 | 39,787.65 | 5,582 | 154.7 |
| 2016 | 202 | 10,934.61 | 6,384 | 67.7 |
| 2017 | - | 16,463.03 | 5,562 | 8.8 |
| 2018 | 111 | - | 6,879 | 5.1 |

### 3.7.6 அரிசி விற்பனையின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பங்களிப்பு

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல நிறுவனங்களுக்கு அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இலங்கை சதொச நிறுவனம் அவற்றுள் ஒன்றாகும். அதன் மாதாந்த அரிசித் தேவைப்பாட்டின் 21 சதவீதமான தொகை இந்த வேலைத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அரசினால் செயற்படுத்தப்பட்டு வரும் உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவை அதிகரித்து சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் படி சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் மூலம் அந்த அரிசியை சந்தைக்கு வழங்குவதன் மூலம் சந்தையினுள் வழங்குனர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களை

கட்டியெழுப்புதல், அதிகபட்ச சில்லறை விலையின் கீழ் அரிசி விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல் இலகுவானதாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.7.7 நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய நிலைமை

(அ) 2020 ஆம் ஆண்டில் இந்த வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா. 300 மில்லியன் தொகையினை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்த போதிலும் இந்த தொகையில் 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 ஆம் திகதி வரையிலும் மாகாண அபிவிருத்தி கூட்டுறவு ஆணையாளர்களினால் உரிய சங்கங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா. 107 மில்லியன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக (கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ச.சங்.தெ/வியா/01/OS/(1) இலக்கம் கொண்டதும் மற்றும் 2020 செப்டெம்பர் 18 ஆம் திகதி கடிதம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) இந்த வேைலத் திட்டத்தின் ஊடாக அரிசி விலைக் கட்டுப்பாடு, அரிசிச் சந்தையில் போட்டித் தன்மையினை ஏற்படுத்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களைக் கட்டியெழுப்புதல் போன்ற அடிப்படை நோக்கங்களை அடைவதற்கான செயற்பாடுகளுக்கு மீளாய்வுக் காலப் பகுதியினுள் கவனத்திற் கொள்ளத் தக்க பங்களிப்பை வழங்கியிருந்தது. அவ்வாறே இந்தக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளுவதன் மூலம் வேலைத் திட்டத்தினைத் தாபிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை நோக்கிப் பயணிக்கக் கூடியதாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறிருக்க 2020 ஆம் ஆண்டில் வேலைத் திட்டத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுத் தொகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மூன்றில் ஒரு பங்கின் அளவிற்குக் குறைந்துள்ளதுடன் வேலைத் திட்டத்தினை எதிர்வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் இதுவரையில் கொள்கை ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்படாததால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையினைப் பேணும் நோக்கிம் போன்றே வேலைத்திட்டத்தின் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையும் வகையிலான முறையான நிகழ்ச்சித் திட்டமொன்றின் தேவைப்பாட்டினை இங்கு தெளிவாக காண முடிகின்றது.

## 04. பரிந்துரைகள்

### 4.1 அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் கடன் தொகை பெற்றுக் கொடுத்தல்

(அ) அரிசி ஆலை உரிமையாளர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டினைத் தீர்மானிக்கையில் தொழிற்படு மூலதனத்தினுள் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை என்பதனைத் (நிதி, இருப்பு, கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்) தீர்மானித்தல்.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய நோக்கினை உடைய குழுவினைத் தெரிவு செய்கையில் அவர்களின் அரிசி ஆலைகளின் கொள்ளளவு, கடன்படு தன்மை, இருப்பைக் களஞ்சியப்படுத்தக் கூடியமை போன்ற காரணிகளின் மதிப்பீட்டில் மற்றும் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்தியதன் பின்னர் பொருத்தமான குழுவினைத் தெரிவு செய்தல் மற்றும் அவர்கள் தொடர்பில் தரவு ஒழுங்கமைப்பொன்றைப் பேணுதல்.

(இ) முதலாவது கட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியினைச் சுழற்சி நிதியாகப் பயன்படுத்தி நெல்லை அரிசியாக மாற்றும் செயற்பாட்டை வினைத்திறனாக நிறைவேற்றி அத்துடன் முன்னர் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியை மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த அங்கத்தவர்களுக்கு மட்டும் ஏனைய கட்டங்களில் கடன் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் மூலம் வேலைத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் கடன் தொகைகளின் ஆபத்தினைக் குறைத்துக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### 4.2 கடன் தொகையினை மீளச் செலுத்துதல்

(அ) தொழிற்படு மூலதனத்தை மீள அறவிடுவதற்கு செலவிடப்படும் காலத்தை தீர்மானிக்கையில் கைத்தொழிலுக்குரிய உடன்பாடுகளுக்கு (Industrial norma) ஏற்ப தொழிற்படு மூலதனச் சுழற்சியைக் (Working Capital Cycle) கணக்கிட்டு அந்தக் கால எல்லைக்குள் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) மாவட்டச் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் கடன் தொகை ஒப்பந்தக் கால இறுதியில் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ஆலை உரிமையாளர்களுக்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல்.

## 4.3 நெல்லினை கொள்வனவு செய்தல்

(அ) விளைச்சலை அறுவடை செய்யும் காலத்திலேயே நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை நேர காலத்துடன் மாவட்டச் செயலாளர்கள் ஊடாக சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) விளைச்சலை அறுவடை செய்யும் காலத்தில் நெல் விற்பனைச் சபைக் களஞ்சியசாலைகளில் உள்ள இருப்பினைக் காலி செய்து கொள்ளளவை அதிகபட்சமாகப் பயன்படுத்தும் வகையில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றை சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக:கு பெற்றுக் கொடுப்பதற்கும் மாவட்டச் செயலாளர்கள் மூலம் நடவடிக்கை எடுத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பத்திற்கமைய நெல்லைக் களஞ்சியப்படுத்தக் கூடிய பண்டசாலை வசதிகள் (Silos) ஏற்படுத்துவதன் மூலமும் மற்றும் நெல்லை உலர்த்தும் இயந்திரம் கொள்வனவு செய்வதன் மூலமும் தேவையான சந்தர்ப்பங்களில் போதுமான வகையில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

(இ) விவசாயிகளிடமிருந்து தற்போது பெறப்படும் நெல் தொகையினை அதிகரித்தல் மற்றும் அதற்காக விவசாயிகளுக்கு நிலையான வளமிக்க விலையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் இதற்காக விவசாய அமைப்புகள் மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தின் தரவுகளைப் பேணிச் செல்லல் மற்றும் முறையான கண்காணிப்பினை மேற்கொள்ளல்.

## 4.4 அரிசி விற்பனை

உரிய மாவட்டக் சங்கங்களினால் அரசாங்கம் தீர்மானிக்கும் அதிகபட்ச சில்லறை விலையின் கீழ் அந்தந்த மாவட்ட மட்டத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாக / சதொச பிரதேச விற்பனை நிலையங்கள் ஊடாக அரிசி விற்பனை செய்யப்படல் வேண்டும் என்பது.

## 4.5 சங்கங்களின் கண்காணிப்பு

அனைத்து மாவட்டக் சங்கங்களும் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரின் முழுமையான கண்காணிப்பிற்கு எப்போதும் உட்படத்தப்படல் வேண்டும். நெல் கொள்வனவு செய்தல், அரிசி விற்பனை, தொழிற்படு மூலதனத் தொகையினை அங்கத்தவர்களின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைத்தல், வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் மாவட்டக் சங்கங்களுக்கு மேற்கொள்ளப்படும் தலையீடு, கண்காணிப்பு போன்றே வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயல்கள் எப்போதும் கண்காணிக்கப்படல் வேண்டும்.

## 4.6 தரவுகளைப் பேணுதல்

(அ) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நெல் கொள்வனவு செய்தல், அரிசி விற்பனை போன்ற இந்த வேலைத் திட்டத்திற்குரிய தரவுகள் தொடர்பாக உணவு ஆணையாளர் திணைக்களத்தில் பேணப்பட்டு வரும் தரவு ஒழுங்கமைப்பில் காணப்படும் தரவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளுள் வேறுபாடுகள் காணப்படுவதனால் அது தொடர்பில் கண்டறிந்து திருத்தங்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையேற்படுமிடத்து அதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) சங்க மட்டத்தில் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களை நாளாந்தம் உணவு ஆணையாளர் திணைக்களத்திடம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்தத் தரவுகளை பகுப்பாய்வு செய்து வேறுபாடுகள் காணப்படுமாயின் உடனடியாக அது தெடர்பில் கூட்டுறவு ஆணையாளர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுத்தல்.

ஒப்பம். / டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**இணைப்பு 01**

**இலங்கை அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளை தயாரிக்கப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள்**

| திகதி | விபரம் | தொகை (ரூபா.) |
|---|---|---|
| 2019.05.28 | சில்லறைக் காசு | 5,000.00 |
| 2019.06.04 | சம்பளம் | 36,667.00 |
| 2019.06.04 | சம்பளம் | 35,742.00 |
| 2019.06.04 | சில்லறைக் காசு | 25,000.00 |
| 2019.06.26 | சில்லறைக் காசு | 25,000.00 |
| 2019.07.09 | சம்பளம் | 691,218.84 |
| 2019.09.06 | RPCS பொலன்னறுவை | 7,000,000.00 |
| 2019.09.10 | சம்பளம் | 642,335.63 |
| 2019.09.24 | எரிபொருள் - தலைவர் | 25,000.00 |
| 2019.09.30 | போக்குவரத்து – தலைவர் | 25,000.00 |
| 2019.10.10 | - | 347,834.18 |
| 2019.10.14 | RPCS பொலன்னறுவை | 5,800,000.00 |
| 2019.10.14 | பண மாற்றம் | 50,000.00 |
| 2019.10.16 | பண மாற்றம் | 200,000.00 |
| 2019.10.18 | சம்பளம் | 158,223.35 |
| 2019.10.18 | தங்குமிட செலவு – தலைவர் | 90,000.00 |
| 2019.10.31 | RPCS பொலன்னறுவை | 15,000,000.00 |
| 2019.10.31 | - | 80,000.00 |
| 2019.11.04 | தலைவர் - கொடுப்பனவு | 22,500.00 |
| 2019.11.14 | மாவட்டசெயலாளர் | 20,000,000.00 |
| 2019.11.13 | சம்பளம் | 720,266.80 |
| 2019.11.20 | - | 2,250.00 |
| 2019.11.21 | - | 2,250.00 |
| 2019.11.27 | சில்லறைக் காசு | 25,000.00 |
| 2019.11.27 | எரிபொருள் | 17,000.00 |
| | | -----------------<br>51,026,287.80 |

**இணைப்பு 02**

**பெறுகைப் பற்றுச் சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள்**

| **திகதி** | **விபரம்** | **தொகை** |
|---|---|---|
| | | **ரூபா.** |
| 2019.06.21 | RPCS அநுராதபுரம் | 400,000.00 |
| 2019.07.05 | RPCS அநுராதபுரம் | 445,015.00 |
| 2019.08.23 | - | 20,000.00 |
| 2019.10.16 | தீர்மானிக்கப்படாத கணக்கு | 105,825.00 |
| 2019.10.30 | தீர்மானிக்கப்படாத கணக்கு | 1,192,500.00 |
| 2019.11.04 | Sales Outlet | 45,430.00 |
| 2019.11.06 | Sales Outlet | 19,700.00 |
| 2019.11.06 | Sales Outlet | 1,100.00 |
| 2019.11.07 | Sales Outlet | 23,075.00 |
| 2019.11.09 | Sales Outlet | 13,900.00 |
| 2019.11.09 | Sales Outlet | 1,200.00 |
| 2019.11.14 | Sales Outlet | 27,050.00 |
| 2019.11.22 | Sales Outlet | 24,500.00 |
| 2019.11.22 | RPCS புத்தளம் | 10,250.00 |
| 2019.11.25 | Sales Outlet | 8,660.00 |
| 2019.11.26 | Sales Outlet | 11,000.00 |
| 2019.11.27 | Sales Outlet | 21,060.00 |
| | | ------------<br>2,370,265.00 |